பக்கங்கள்: 12

விலை: 20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | வைகாசி 15 புதன்கிழமை 29.05.2019 | கதிர் 205

## இனி இது ரகசியம் அல்ல!

பட்டறிவிலிருந்து பாடம் படிக்காதவனை அறிவற்றவன் என்றுதான் கூற வேண்டும்.

தென்னிலங்கையில் இப்போது நடக்கும் சம்பவங்களை இந்தக் கண்ணோடுநோக்கிவிசனிக்கின்றார் சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன.

பக்கம் 02 »

# ரிஷாத், அசாத் சாலி, ஹிஸ்புல்லாவை பதவி நீக்க 24 மணி நேரக் காலக்கெடு!

## ஜனாதிபதிக்கு வழங்கினார் அத்துரலிய ரத்ன தேரர்



கொழும்பு, மே 29

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஆகியோரைப் பதவிகளில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 24 மணி நேரக் காலக்கெடுவை வழங்கியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரதன தேரர்.

ஜனாதிபதி இந்தக் காலகெடுவுக்குள் அவர்களைப் பதவிகளில் இருந்து நீக்கா விட்டால்,முக்கியதீர்மானம்ஒன்றைஎடுக்கபோகிறாஎனவும்அவர்எச்சரித்துள்ளார்.

கொழும்பு ராஜகிரியவில் உள்ள சதஹாம் செவன பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர்

பக்கம் 11 »

## யாழ்ப்பாணத்தில் மாணவன் உணவு ஒவ்வாமையால் சாவு!

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில்தரம் 2 இல்பயிலும்மாணவன் ஒருவர் உணவு ஒவ்வாமையால் இரண்டு வாரங்களாக வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

அவரது சகோதரர்கள் இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் தொடர்ந்துசிகிச்சைபெற்றுவருகின்றனர்.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் தரம் 2இல் பயிலும் சத்தியகரன் அபிகரன் (வயது–7) என்றமாணவனே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

## குருநாகல் வைத்தியருக்கு எதிராக நேற்றும் 30 பெண்கள் முறைப்பாடு

கொழும்பு, மே 29

குருநாகல் போதனா வைத்தியசாலைமகப்பேற்று வைத்தியராகபணியாற்றிய வைத்தியர் சேகு சிஹாப்தீன் மொஹமட் ஷாபிக்கு எதிராக நேற்றுப் பெண்கள்

பக்கம் 11 »

## குருநாகல் வைத்தியசாலை முன் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டம்!

### கடைகளும் முற்றாக அடைப்பு



கொழும்பு, மே 29

மகப்பேற்றுவைத்தியர்சிஹாப்தீன் ஷாபிக்குஎதிராகநேற்றுக்குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பிக்குகள், பாதிரியார் உள்ளிட்ட பலர் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமையுடன்குருநாகலில்

பக்கம் 11 »

## கண்டியில் இரவு வேளைகளில் மர்மமான ட்ரோன்கள் பறப்பு!



கொழும்பு, மே 29

கண்டியின் பல பகுதிகளில் இரவு நேரத்தில் ஆளில்லா விமானம் பறந்து திரிவதால் மக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாத காலமாக தலாத்துஓய, மாரசன்ன, முதுனகடை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில்

பக்கம் 11 »

## கண்டியிலும் 6,000 பேருக்கு கருத்தடைச் சிகிச்சையாம்!

### புதிய குண்டைத் தூக்கிப் போட்டார் எஸ்.பி.

கொழும்பு, மே 29

குருநாகல் போதனா வைத்தியசாலை வைத்தியர்ஷாபி, சிசேரியன் சத்திரசிகிச்சை என்றபோர்வையில் பெண்களை மலடாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டார் எனக் குற்றச்சாட்டு எழுந்து அந்தப் பிரச்சினை கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் நேற்றுப் புதிய தகவலொன்றை வெளியிட்டுள்ளார் எஸ். பி.திசாநாயக்க எம் பி.

செய்தியாளர்களை சந்தித்த எஸ்.பி. திஸநாயக்க, பேராதனை வைத்தியசாலையில்

பக்கம் 11 »

## யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,மே 29

ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்புக்கு எதிராக யாழ்ப்பாணத்திலும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நகரில் அமைந்துள்ள பள்ளிவாசல்களின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் ஐந்து சந்திப் பகுதியில் நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் – மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பள்ளிவாசலில் வரும் வெள்ளிக்கிழமை நண்பகல் தொழுகையின் பின்னர் கூடும் இஸ்லாமியர்கள், ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான பதாதைகளை ஏந்தியவாறு பேரணியாக ஐந்து சந்திக்கு

பக்கம் 11 »

## முல்லைத்தீவு நீதிமன்ற கட்டளைப்படி மீண்டும் நீராவியடிப் பிள்ளையாருக்குப் பெயர்ப் பலகை!



முல்லைத்தீவு, மே 29

பௌத்த பிக்குவால் கணதேவி தேவாலயம் எனப் பெயர் மாற்றப்பட்ட நீராவியடிப் பிள்ளையார் ஆலயப்பெயர்ப்பலகைமுல்லைத்தீவுமாவட்ட நீதிமன்றின் கட்டளைப்படி மீண்டும் நீராவியடி பிள்ளையார் ஆலயம் என மாற்றப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் குறித்த

பக்கம் 11 »

## மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு கோரி வழக்கு

கொழும்பு, மே 29

மேல் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்ததேர்தல்கள்ஆணைக் குழுவுக்கு உத்தரவிடுமாறு கோரி உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடுவலைபிரதேசத்தைச் சேர்ந்தசிரிசெனதொலவத்த என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவின்தலைவர்மஹிந்த தேசப்பிரியஉள்ளிட்டவர்கள்

பக்கம் 11 »

## முஸ்லிம் ஆசிரியர்களுக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா வழங்கிய இடமாற்றங்கள் ஜனாதிபதியால் ரத்து!

கொழும்பு, மே 29

கிழக்குமாகாணஆளுநர் எம்.ஏ.ஹிஸ்புல்லாவின் உத்தரவின் பேரில் மாகாணத்தின்தமிழ்பாடசாலைகளில் கற்பித்து வந்த 270 முஸ்லிம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரத்துச் செய்துள்ளார்.

ஜனாதிபதியின் நேரடி உத்தரவை ஏற்று கிழக்கு மாகாணக் கல்வி அதிகாரிகள் ஏற்கனவே வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவுகளை ரத்துச் செய்து நடவடிக்கை எடுத்திருக்கின்றனர்.

'தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தவிர்த்தல்' என்ற பெயரில் ஆளுநர் ஹிஸ்புல்லா, தமிழ் பாடசாலைகளில் சேவையாற்றி வரும் முஸ்லிம் ஆசிரியர்களை முஸ்லிம் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்து வருகிறார் எனவும், காத்தான்குடிக்கென தனியானகல்வி வலயத்தைஏற்படுத்தமுயற்

பக்கம் 11 »

## ஆலய வழிபாட்டில் சமத்துவம் கோரி வரணியில் சத்தியாக்கிரகம் ஆரம்பம்



யாழ்ப்பாணம், மே 29

ஆலய வழிபாட்டில் அனைவருக்கும் சமத்துவம் வேண்டுமென வலியுறுத்தி வரணி

பக்கம் 11 »

# ரிஷாத்துக்கு எதிரான பிரேரணை; அவசரமாக முடிவெடுக்கலாகாது

## கூறுகின்றார் மாவை எம்.பி.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரானை நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் முடிவெடுக்கும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இந்த விடயத்தில் அவசரப்பட்டு முடிவெடுக்கமாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பின்னரான சூழலில் தாக்குதல் தாரிகளுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளார் என்ற குற்றச்சாட்டு அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு மட்டுமன்றி கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி, கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் முஜீபுர் ரஹ்மான் ஆகியோருக்கும் தொடர்பு இருப்பதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் அமைச்சர் ரிஷாத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படுகின்றபோது அதற்கேற்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு ஒன்றுகூடி முடிவெடுக்கும். நாங்கள் அவசரப்படவில்லை. நிதானமாக முடிவெடுப்போம் – என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறும் கருத்துகள் நிச்சயம் அவதானிக்கப்பட வேண்டியவை.

*"அமிர்தலிங்கம் போன்றோர் தமிழர்கள் மத்தியில் மிதவாதத் தலைவர்களாக இருந்தனர். 1980 – 1983 களில் அத்தகைய தலைவர்களுக்கு எதிராக இனவாத விமர்சனம் நடந்தது.*

*"அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஒரு ஜனநாயகவாதி. அவரை அன்றைய ஜெயவர்த்தனா அரசு விமர்சனம் செய்து, எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து அகற்றியது.*

*"அப்போது அவ்வாறு செய்ய வேண்டாம் என நாம் வலியுறுத்தினோம். அவ்வாறு நீங்கள் செய்தால் இறுதியில் தமிழ் மக்களுக்கு பயங்கரவாதத் தலைவர்களே துணையாக இருக்கும் நிலைமை வரும் என்று கூறினோம்.*

*"இறுதியில் என்னாவாயிற்று? தமிழர்களுக்காக நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு யாரும் இருக்கவில்லை. தமிழ் மக்கள் தீவிரவாதத் தலைவர்களின் பின்னால் அணி திரளும் நிலையை நாங்களே ஏற்படுத்தினோம்.*

*"அன்று சாதாரண தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதத்தைத் தூண்டிவிட்டு அவர்களைப் புலிகளாக உருவாக்க வழி செய்தோம்.*

*"அந்தப் பட்டறிவின் பின்னரும் அந்த வேலையை நாம் திரும்பவும் செய்யக்கூடாது.*

*"ரிஷாத் பதியுதீன் போன்றோர் மிதவாதத் தலைவர்கள். அவர்களுக்கு எதிராக இனவாதமாகப் பேசி அவர்களை வெளியேற்றினால் –*

*"அமிர்தலிங்கத்தை வெளியேற்ற ஆயுதம் தாங்கிய பிரபாகரன் உருவாகியமை போன்ற நிலைமைதான் முஸ்லிம்கள் மத்தியிலும் ஏற்படும். தற்போதைய நிலைமை நீடித்தால் மற்றொரு பிரபாகரன் உருவாகும் நிலை வரும்.*

*"தற்போது ரிஷாத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரும் எதிர்க்கட்சியினர்தான் அன்று ஒக்டோபரில் தாங்கள் ஆட்சி அமைப்பதற்கு அவரின் ஆதரவைக் கெஞ்சினர். அவர் அன்று அத்தரப்பினருக்கு ஆதரவு கொடுத்திருந்தால் இன்று அவர்கள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்க மாட்டார்கள்."*

– என்று தெரிவித்திருக்கின்றார் அமைச்சர் ராஜித சேனாரத்ன.

முற்றிலும் உண்மையான கூற்று. முஸ்லிம்களின் ஜனநாயகத் தலைமைகளைக் கருவறுப்பதன் மூலம் முஸ்லிம் மக்களை தீவிரவாதத்தின் பக்கம் நெட்டித் தள்ளுவது மிகமிக மோசமான முட்டாள்தனம்.

1980கள் எமக்கு நினைவிருக்கின்றது. இந்த நாட்டின் பத்துப் பன்னிரண்டு வீத தமிழ் மக்கள் எங்களை என்ன வெட்டியா பிடுங்கி விட முடியும் என்ற திமிரில்தான் பௌத்த, சிங்களப் பேரினவாதம் அப்படி மேலாண்மைத் திமிருடன் அப்போது நடந்து கொண்டது.

ஆனால், அந்த மமதைப் போக்குக்கு அடுத்து முப்பது வருடங்கள் இப்படி பாரிய விலையைக் கொடுக்க வேண்டி நேரும் என்று சிங்களத்துக்குத் தெரிந்திருந்தால் தென்னிலங்கைச் சிங்கள, பௌத்த பேரினவாதம் அப்போது அப்படித் துள்ளிக் குதித்திருக்காது. வினையை விதைத்து வாங்கிக் கட்டிக் கொண்டிருக்காது.

1980களில் கட்டவிழ்ந்த பேரினவாதத்தின் விளைவுகள் குறித்து தென்னிலங்கைச் சிங்களம் உணர்ந்து புரிந்து கொள்ளத் தொடங்கிய போது it was too late.

அப்போது ஆக சிறியளவு உதவியும் தஞ்சமும் மட்டும் தமிழ்ப் போராளிகளுக்கு இந்தியாவில் கிடைத்தது. ஆனால் அந்தப் போராட்டத்தை முன்னெடுத்த புலிகள் முற்றும் முழுதுமாகச் சுயத்தில் தங்கியிருந்து – தமிழினத்தின் தனித்துவத்தில் தங்கியிருந்து – பிற உதவியின்றிப் போராட வேண்டியிருந்தது.

ஆனால் இன்று இலங்கையில் நிலைமை அதுவல்ல. இஸ்லாமிய பயங்கரவாதம் உலகளாவி நிற்கின்றது.

அதனை எதிர்கொள்ளும் விடயத்தில் தென்னிலங்கை மிகத் தந்திரோபாயமாக – மிக சாணக்கியமாக – நடக்க வேண்டும்.

1980 களில் தமிழரின் உரிமைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பிய காலத்தில் அதைத் தந்திரோபாயமாக – சாணக்கியமாக – அணுகி, எதிர்கொள்ளத் தவறியமையின் விளைவுகளைப் புரிந்து கொண்டு –

இப்போது சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாதப் பின்புலத்துக்கு மத்தியில் இலங்கை வாழ் முஸ்லிம்களை அரவணைத்து வளைத்துப் போட்டு இவ் விடயத்தை வெற்றிகரமாக – கனகச்சிதமாக – முடிக்க வேண்டும்; இலங்கையில் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாதத்தை ஒட்ட நறுக்க வேண்டும்.

இந்தத் தந்திரோபாயத்தைப் புரிந்துகொண்டு அதன் வழி செயற்படாவிட்டால் – முன்னெடுக்காவிட்டால் – அமைச்சர் ராஜித கூறுகின்றமை போல் முஸ்லிம்கள் மத்தியிலும் பிரபாகரன் உருவாகின்றமை தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஒருபுறம் தீவிரவாதத்துக்கு – பயங்கரவாதத்துக்கு – எதிரான இராணுவ நடவடிக்கை என்றால், மறுபுறம் முஸ்லிம்களின் மனதை வெற்றி கொள்ளும் அரசியல் தந்திரோபாயம். இது தெரியாமல் தென்னிலங்கை மக்களும் ஆட்சிப் பீடமும் நடந்தால் விளைவு விபரீதமாகலாம். தெற்குக்கு இது புரியாவிட்டால் நாடு மீண்டும் குட்டிச்சுவராவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

**- மின்னல் -**

## சம்பந்தன் - ஆஸி தூதர் சந்திப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை இலங்கைக்கான புதிய ஆஸ்திரேலியத் தூதுவர் டேவிட் ஹொலி நேற்று நேரில் சந்தித்துப் பேசினார்.

கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் முக்கியமாகப் பேசப்பட்டது.

# இந்திய புலனாய்வு அமைப்பு விசாரணைக்கு வருகின்றது!

இலங்கையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகள் குறித்த விசாரணைகளில் இணைந்து கொள்வதற்கு இந்தியாவின் தேசிய புலனாய்வு முகவர் அமைப்பிற்கு இந்திய உள்துறை அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் இடம்பெற்று ஒரு மாதத்துக்குப் பின்னர் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்புகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் தங்களிடம் உள்ள தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு இலங்கை அதிகாரிகள் இணங்கியுள்ளமையைத் தொடர்ந்தே இந்திய உள்துறை அமைச்சு இந்த அனுமதியை வழங்கியுள்ளது என இந்த விவகாரத்துடன் தொடர்புள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வைசி மோடி என்ற அதிகாரியின் தலைமையில் இந்திய தேசிய புலனாய்வு முகவர் அமைப்பை சேர்ந்த குழுவினர் இலங்கைக்கு செல்லவுள்ளனர். இவர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்களுக்கு இலங்கை குண்டுவெடிப்புகளுடன் உள்ள தொடர்பு குறித்து விசாரணைகளை மேற்கொள்வார்கள்.

இலங்கையில் குண்டுத் தாக்குதல்களை வழிநடத்தியவர்களுக்கும் இந்தியர்களுக்கும் இடையில் சில பொதுவான தொடர்புகள் உள்ளமை தெரியவந்துள்ளது என இந்திய உள்துறை அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிகாரிகள் இதனை உறுதி செய்வதற்காக காத்திருக்கின்றோம் எனவும் அவர் கூறினார்.

இந்திய அதிகாரிகளால் கடந்த மாதம் கேரளாவில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் தான் இலங்கை தற்கொலைக் குண்டுதாரிகளின் தலைவன் எனக் கருதப்படும் சஹ்ரான் ஹாசிமை பின்பற்றி வந்தார் எனவும் அவர் போன்ற தாக்குதலொன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்ததார் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

சஹ்ரான் தென்னிந்தியாவில் சில இளைஞர்களைத் தீவிரவாதமயப்படுத்தியிருந்தார் எனவும் அவர் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியா தன்னிடமுள்ள அனைத்து விவரங்களையும் இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளும் எனக் குறிப்பிட்டுள்ள இந்தியாவின் தேசிய புலனாய்வு முகவர் அமைப்பின் அதிகாரிகள், மடிகணிணிகளை ஆராய்ந்த வேளை கண்டுபிடிக்கப்பட்ட இலத்திரனியல் ஆதாரங்கள் உட்பட அனைத்தையும் இந்தியா பகிர்ந்து கொள்ளும் எனவும் தெரிவித்துள்ளனர். (ஐ)

# அஸாத் சாலி பதவி நீக்கப்படுவார்?

மேல் மாகாண ஆளுநர் அஸாத் சாலி, எல்லைமீறி செயற்பட்டால் அவரை பதவிநீக்கம் செய்யும் முடிவை ஜனாதிபதி எடுக்கக்கூடும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எச்சரிக்கை விடுத்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்–

செயற்பாட்டு அரசியலை முன்னெடுப்பது அல்ல ஆளுநர்களின் கடமை. எனவே, அரசியலை இலக்காகக் கொண்டு சர்ச்சைக்குரிய அறிவிப்புகளை விடுக்காமல், அரசியல் களத்திலிருந்து ஒதுங்கி நின்று தமது மாகாண மக்களுக்கு சேவையாற்றுமாறு அஸாத் சாலியிடம் கேட்டுக் கொள்கின்றேன். ஆளுநரை நியமிப்பதற்குரிய அதிகாரம் இருப்பதுபோல், அவரை பதவி நீக்கம் செய்வதற்கான அதிகாரமும் ஜனாதிபதிக்கு இருக்கின்றது.

எனவே, எவராவது எல்லைமீறி செயற்பட்டால் அவர்கள் தொடர்பில் தீர்க்கமானதொரு முடிவை எடுக்க வேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்படும் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

அதேவேளை, குருநாகலை வைத்தியசாலையிலுள்ள மகப்பேற்று வைத்தியர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். இதற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். குற்றவாளியா அல்லது நிரபராதியா என்பதை விசாரணை தீர்மானிக்கப்பட்டும்.

அதைவிடுத்து ஊடகவியலாளர் மாநாடுகளை தினந்தோறும் நடத்தி, வைத்தியருக்கு சார்பாக கருத்து வெளியிட்டால் மக்கள் குழப்பமடையக்கூடும்–என்றார்.



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் சிக்குண்டோரை நேற்றுத் தேசிய வைத்தியசாலையில் பார்வையிட்டார் ஞானசாரதேரர்.(ஐ)

## இஸ்லாமிய அடிப்படைவாதத்தை வளர்க்க

# துருக்கியில் இருந்து 4 கோடி டொலர்கள்!

### ஞானசார தேரர் பகீர் தகவல்



கொழும்பு, மே 29

**இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு எதிராகப் பேசுவோரை - செயற்படுவோரை முடக்கும் வேலைகளுக்காகத் துருக்கியில் இருந்து 4 கோடி டொலர் இலங்கைக்கு வருவதாக பொதுபலசேனாவின் ஞானசார தேரர் தெரிவித்தார்.**

நேற்று முன் தினம் இரவு தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைக் கூறினார்.

நேற்று முன்தினம் இரவு பத்தரை மணி முதல் நேற்று அதிகாலை ஒன்றேகால் மணி வரை பல்வேறு ஆதாரங்களை வைத்து விளக்கி பேட்டியளித்தார் ஞானசார தேரர்.

அவர் அதில் கூறியவை வருமாறு: –

கடந்த ஆட்சியில் தொடர்ந்து கோட்டாபய பாதுகாப்புச் செயலராக இருந்திருந்தால் அப்போது இந்தப் பிரச்சினைக்கு முடிவை கட்டியிருப்பார். இப்போதைய கோட்டாபய எப்படியோ என்று தெரியாது. ஆனால் அன்று நாங்கள் சொன்னதை அவர் கேட்டார். நாட்டுக்கு ஓர் ஆபத்து இருப்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

இலங்கையில் 41 அடிப்படைவாத இஸ்லாமிய அமைப்புக்கள் உள்ளன. அதை நாங்கள் கூறினோம். நல்லாட்சிக்கான தேசிய முன்னணி பற்றி நாங்கள் அப்போது எச்சரித்திருந்தோம். ஷிப்லி பாரூக்கும் அப்துல் ரகுமானும் சஹ்ரானை நாட்டில் இருந்து வெளியில் அனுப்ப முயற்சிகளை எடுத்தமையைப் பற்றிக் கூறினோம். அன்று நடவடிக்கை எடுக்கத் தவறியதால் சஹ்ரான் இந்தியா சென்று பயிற்சி பெற்று உலகத் தீவிரவாதிகளுடன் தொடர்பை ஏற்படுத்தினார்.

முஸ்லிம் மக்கள் அடிப்படைவாதக் கோட்பாடுகளில் இருந்து விலகி வெளியில் வரவேண்டும். எம்முடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். எமது நாட்டின் அரசியல்வாதிகளே நரேந்திர மோடியை உதாரணத்துக்கு எடுத்துச் செயற்படுங்கள். முஸ்லிம் வாக்குகளை எடுப்பதற்காக நாட்டை விற்கவேண்டாம் என்று அரசியல்வாதிகளைக் கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர்கள் பலர் அடிப்படைவாதிகளுடன் தொடர்பில் உள்ளனர்.

2012 ஆம் ஆண்டு 1000 கோடி ரூபாவுக்கும் மேல் இலங்கைக்கு வந்தது. அமைச்சர் ரிஷாத் எல்லாவற்றையும் மூடிமறைத்து இதனை கொண்டுவந்தார். 4 கோடி டொலர் துருக்கியில் இருந்து வருகிறது. இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கு எதிராகப் பேசுவோரை முறியடிக்க அந்த நிதி பயன்படுத்தப்படுகிறது. யூசுப் அல் கர்டாவி என்ற இஸ்லாமியப் பெரியாரை ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சிலின் தலைவரும் அமைச்சர் ஹக்கீமின் இணைப்பாளர் நயீமுல்லாவும் சந்தித்தமை ஏன்? முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு அண்மையில் துருக்கியில் இருந்து மடிக்கணினிகள் வந்தமை ஏன் என்று கேளுங்கள். விரைவில் நாங்கள் பல விடயங்களை வெளிப்படுத்துவோம் – என்றார். (ஐ)

# தமிழ் மக்களை மிக மோசமாக ஏமாற்றிய தலைவர் மைத்திரி!

### சிறிதரன் எம்.பி. சாடல்



கொழும்பு, மே 29

இதுவரை காலத்தில் தமிழ் மக்களை மிக மோசமாக ஏமாற்றிய ஓர் அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன இருக்கிறார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் மத்தியில் மாத்திரமன்றி, சிங்கள மக்கள் மத்தியிலும் ஓர் ஏமாற்றுக்காரராகத் தன்னைச் சித்திரித்துக் கொண்டுள்ள ஜனாதிபதி சிறிசேனவின் அரசியல் எதிர்காலம் இத்தோடு முடிவடைந்து விட்டது. இனிவரும் காலங்களில் அவரை ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகக் கூட மக்கள் தெரிவு செய்யமாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# பாகிஸ்தான் பிரஜைகள் ராஜகிரியவில் கைது!

கொழும்பு, மே 29

பாகிஸ்தான் பிரஜைகள் இருவர் ராஜகிரியவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விஸா முடிவடைந்த நிலையில், நாட்டில் சட்ட விரோதமான முறையில் தங்கியிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

28 மற்றும் 30 வயதான இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் கூறினர்.

இதேவேளை, இந்த இருவர் மீதும் இரு வேறு குற்றச்சாட்டுகளில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும், இவை தொடர்பாக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கன்னியாவையும் தமிழர் பறிகொடுக்க முடியாது!

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சீற்றம்



வவுனியா, மே 29

தமிழர்களின் பாரம்பரிய கலாசாரப் பண்பாட்டுச் சின்னங்களைக் கையகப்படுத்துவதைச் சிங்களப் பேரினவாதம் இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இதன் ஓர் அங்கமாகவே கன்னியாவிலும் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான பூர்வீகப் பகுதியை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாதென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

தமிழ் மன்னன் இராவணனால் கன்னியா வெந்நீர் ஊற்று அமைக்கப்பட்டது என்ற வரலாற்றுப் பதிவுகளின்படி அப்பகுதி தமிழர்களின் பாரம்பரியத்துடன் இரண்டறக் கலந்த மிக முக்கியமான பிரதேசமாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பகுதியைத் திட்டமிட்டுச் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அடையாளமாக மாற்றுவதற்கான முயற்சிகள் அரசின் ஆசியுடன் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இது ஒருபோதும் நாட்டின் நல்லிணக்கத்துக்கும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் வழிவகுக்காது என்பதை ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட ஏனையோரும் உணர்ந்து கொள்வது அவசியம்.

எந்தவொரு மதத்துக்கும் எந்தவொரு மதவாதிக்கும் ஏனைய மதங்களின் மீது அதிகாரம் செலுத்துவதற்கும் அந்த மதச் சின்னங்களை அழிப்பதற்கும் அதிகாரம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக, இந்த வெந்நீர் ஊற்றுக்கு அருகில் உள்ள வில்கம் விகாரையைச் சேர்ந்த தேரர்களால் இப்பகுதியை கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவைகளை தடுத்து நிறுத்துவதற்கு அவ்வப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும், அதற்கு நிரந்தரத் தீர்வுகள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என்பது கண்டனத்துக்குரியதாகும். இதுவரை ஆட்சியில் இருந்தவர்களும் இன்று ஆட்சியில் இருப்பவர்களும் தமிழ் மக்களின் மீது சிங்களப் பேரினவாதம் தனது அதிகாரத்தை நிலைநிறுத்த முற்பட்டதே இந்த நாடு கடந்த முப்பது ஆண்டுகளாக மிகப்பெரிய அவலங்களுக்கும் சீர்கேடுகளுக்கும் காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் அதை உளமார உணர்ந்தவர்களாக ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் தென்படவில்லை. இந் நிலை மாற்றப்படவேண்டும்.

இந்நிலையில் தற்போது, அந்தப் பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயம் உடைக்கப்பட்டு அப்பகுதியைக் கையகப்படுத்தபடும் செயற்பாடொன்று முழு மூச்சில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வில்கம் விகாரையைச் சேர்ந்த தேரர்களும் தொல்பொருள் திணைக்களமும், காணியின் உரிமையாளரும் பிள்ளையார் ஆலய அறங்காவலருமான திருமதி.க.கோகிலறமணியிடம் இருந்து அக்காணியை பறிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர். 22 பேர்ச் அளவுடைய இக்காணியைக் கோகிலறமணியின் பேரனுக்கு பிரித்தானிய அரசு வழங்கியுள்ளது. ஆரம்பத்தில் இக்காணியை கொள்வனவு செய்வதற்கான பேச்சுக்களே தேரர்கள் முன்னெடுத்திருந்தனர். எனினும் உரிமையாளரான கோகிலறமணி அதற்குச் சம்மதித்திருக்கவில்லை.

இந்நிலையில், அந்தக் காணியைக் கையகப்படுத்துவதற்கு முனையும் தேரர்களின் செயற்பாட்டுக்கு இசைவாக, அரசும் வர்த்தமானி அறிவித்தலை விடுத்திருக்கின்றது. இதன்மூலம் வடக்கு – கிழக்கில் சிங்கள பௌத்தமயமாக்கலை அரசு ஊக்குவிப்பதற்கு துணைபோகின்றது என்பது உறுதியாகின்றது.

வடக்கில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் சிங்கள, பௌத்த மயமாக்கலை கட்டுப்படுத்துவதற்கு எவ்விதமான முறையான செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. அதேநேரம் அதனை தடுப்பதற்கு முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களுக்கும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என அடையாளம் காட்டி வரும் கூட்டமைப்பில் உள்ள தற்போதைய பிரதிநிதிகளும் தயாராக இல்லை.

ஆரம்பத்தில் தமிழர்களுக்கு தீர்வைத் தரும் புதிய அரசமைப்பு வருகின்றது. ஆகவே அரசை எதிர்க்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் கூட்டமைப்பு இருந்து வந்தது. தற்போது அரசு தமிழ் மக்கள் சார்ந்து எதனையும் செய்வதாக இல்லை என்று நன்கறிந்த பின்னரும் அதே நிலைமையில் இருக்கவேண்டியதன் அவசியம் என்ன?

தற்போது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் கோட்டையான திருகோணமலை மாவட்டத்தில் முக்கிய பகுதிகள் எல்லாம் சிங்கள பௌத்தமயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்குள் சென்று கொண்டிருக்கின்றன. அதில் சைவர்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க கன்னியா பகுதியும் பறிபோகும் அபாயத்தில் இருக்கின்றது. இதேபான்று முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயமும் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு, இன நல்லிணக்கம் இவற்றை தற்போதைய ஆட்சியாளர்களிடத்திலிருந்தும் எதிர்பார்க்க முடியாதுள்ளது என்பது வெளிபடையாகி விட்ட நிலையில், ஆகக்குறைந்தது தமிழர்களின் இருப்பினையாவது பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

அந்த வகையில் தனியாருக்குச் சொந்தமான கன்னியா பாரம்பரியப்பகுதியை கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிராக விரைந்து செயற்படவேண்டியுள்ளது. இல்லாது விட்டால் தமிழர்களின் வரலாறு செறிந்த திருமலை மாவட்டம் பறிபோய் தமிழர்கள் அநாதைகளாகும் நிலைமையே ஏற்படும் ஆபத்துள்ளது. இனியும் அமைதியாக இருப்பதன் ஊடாக அரசைப் பாதுகாக்கும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதைச் சாதிக்க விளைகின்றார்கள் என்ற கேள்வியே இங்கு எழுகின்றது – என்றுள்ளது. (ஐ – 100)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## அதிகாரப் பகிர்வுப் போக்கை புறந்தள்ளும் கூட்டமைப்பினர்

'படிப்பது சிவபுராணம்: இடிப்பது சிவன் கோவில்' என்பதுதான் பல அரசியல்வாதிகளினதும் அரசியல் கட்சிகளினதும் போக்கு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் செய்கின்ற காரியங்களைப் பார்க்கும்போது இந்தப் பேச்சு மொழி தான் நினைவுக்கு வருகின்றது.

மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதே கூட்டமைப்பினதும் ஈழத் தமிழர்களினதும் நிலைப்பாடு. பேச்சுக்குப் பேச்சு, மூச்சுக்கு மூச்சு இதைத்தான் கூட்டமைப்பு வலியுறுத்தி வந்தது. ஆனால் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இதன் படி ஒழுகுகின்றார்களா?

மாகாணங்களுக்கு இருக்கும் அதிகாரங்களை மேலும் வெட்டிக் குறைத்து, அவற்றை மத்திய அரசு பிடுங்குவதற் காக மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் திவிநெகும என்ற பெயரில் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டமை பலருக்கும் நினைவிருக்கலாம்.

இதற்கு எதிராகக் கூட்டமைப்பினர் உயர்நீதிமன்றுக்குச் சென்றனர். மாகாண சபைகளின் – குறிப்பாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபையின் – அனுமதியோ, இணக்கமோ இன்றி இப்படி மாகாணங்களுக்கு 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் வழங்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கலை மத்திய அரசு திரும்பப் பிடுங்க முடி யாது என்று உயர் நீதிமன்றத்தில் கூட்டமைப்பு வாதிட்டது. கூட்டமைப்பு சார்பில் மாவை சேனாதிராசா எம்.பியே இந்த வழக்கைத் தொடுத்தார். சுமந்திரன் எம்.பியும் தமிழர் தரப்பு வாதத்தை முன்வைத்தார்.

அந்த வாதத்துக்குச் சார்பாகத் தீர்ப்பளித்தமை காரணமாகவே அப்போது உயர்நீதிமன்றில் பிரதம நீதியரசராக இருந்து அந்தத்தீர்ப்பை வழங்கிய நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க ஒரேநாளில் பிரதம நீதியரசர் பதவியில் இருந்து வல்வந்தமாகக் கலைக்கப்பட்டார்.

இப்படி எல்லாம் மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிரும்படி வற்புறுத்தி நின்ற தமிழ்க் கூட்டமைப்பு இன்று என்ன செய்கின்றது?

'கம்பெரலிய', 'பனை நிதியம்' எல்லாம் எத்தகையவை?

மத்திய அரசு முன்னெடுக்கும் திட்டங்களுக்கு தாங்கள் பெயருக்கு 'இடைத்தரகர்களாக' இருந்து கொண்டு அவற்றுக்கு முண்டு கொடுக்கும் வேலையைத்தான் அவர்கள் செய்கின்றார்கள்.

இந்த இரு வழிவகைகள் ஊடான – கம்பெரலிய மற்றும் பனைநிதியம் ஆகியன மூலமான – திட்டங்களை செயற் படுத்தும் உள்ளூர் முகவர்கள் யார்? மத்திய அரசின் கீழ் நேரடியாக இயங்கும் பிரதேச செயலகங்கள்தாம்.

உண்மையில் இந்த நிதியும், திட்டங்களும் மாகாண சபையின் கட்டமைப்புக்கள் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டியவை.

இன்று வேண்டுமானால் வடக்கு மாகாண சபை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆளுநரின் கைகளில் இருக்கலாம். ஆனால், அதுதான் அதிகாரப் பரவலாக்கல் அலகு. அதன் ஊடாகத்தான் இந்த இரு கட்டமைப்புகளின் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதே முறை.

அப்படி இல்லாமல், அத்தகைய நடவடிக்கையை மஹிந்தரின் முன்னைய அரசு முன்னெடுத்த போது நாம் அதை முழுமையாக எதிர்த்தோம். ஆனால், அதையே இப்போது நமது எம்.பிக்கள் முன்னின்று ஆரவாரமாகச் செய்கின்றார்கள்.

மஹிந்தரின் அரசு அப்போது அப்படி முன்னெடுத்தமையிலாவது ஒரு நியாயம் இருந்ததாகக் கூறலாம்.

அது, முப்பது ஆண்டுகால யுத்தம் முடிவுக்கு வந்த நேரம். வடக்கு. கிழக்கில் மீள் கட்டுமானம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளைத் தேசிய ரீதியில் ஒன்றிணைத்து முன்னெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு இலங்கை அரசின் முன்னால் இருந்த வேளை அது.

அந்தவேளையில் மாகாணத்துக்குரிய அதிகாரங்களை மத்திய அரசு கையில் எடுத்து சில திட்டங்களை ஒன்றிணைத்து முன்நகர்த்த முயன்றது என்ற சாக்கிலாவது அந்த நடவடிக்கையை நியாயப்படுத்தலாம். அப்போது வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் கூட நடக்காத காலம்.

இப்போது அப்படியல்ல. யுத்தம் முடிவடைந்து பத்தாண்டுகள் கடந்து விட்டன. மாகாணங்களில் மாகாண நிர்வாகங்கள் அமைந்து விட்டன. வடக்கு மாகாண சபையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஒரு பதவிக்காலம் கூட முடிவடைந்து விட்டது.

இப்போது ஒதுக்கப்படுகின்ற மாகாண அபிவிருத்திக்கான நிதி உண்மையில் மாகாண சபைகளுக்குத்தான் வரவேண்டும். ஆனால், இன்று கூட்டமைப்பு எம்.பிக்கள் தலையில் வைத்துக் கூத்தாடும். கம்பெரலிய, பனை நிதியம் போன்றன நேரடியாக மத்திய அரசினால் முன்னெடுக்கப்படுபவை. அவற்றில் ஒரெயொரு அனுகூலம் இந்த விவகாரங்களில் கூட்டமைப்பின் எம்.பிக்கள் இப்போது இடைத் தரகர்கள் போல செயற்படலாம்: செயற்படுகின்றனர். அவ்வளவே.

அதுவும்கூட அவர்கள் காபந்து பண்ணும் ரணில் அரசு ஆட்சியிலிருக்கும் வரைதான். அது கவிழ்ந்ததும், இடைத் தரகர்கள் சிறப்புரிமையும் 'அவுட்' ஆகிவிடும்.

அதற்குப் பிறகு அப்போது மத்திய அரசில் இந்த விடயத்துக்குப் பொறுப்பாக இருக்கும் ஒருவரும் – முன்னர் அந்தப் பொறுப்பில் இருந்த பஸில் ராஜபக்ஷ போன்ற ஒருவரும் – அவரின் செம்பு தூக்கிகளும்தான் பழையபடி இந்த விடயங்களைக் கையாளுவர்.

அப்போது வெளியில் வந்து நின்று கொண்டு அதிகாரப் பரவலாக்கல் என்று கூக்குரல் இடுவார்கள் இந்த எம்.பிக்கள்.

அதிலும் பார்க்க இப்போதே நேர்சீராகச் சென்றால் என்ன, கம்பெரலிய, பனை நிதியம் போன்றவற்றைத் தற்போதைய ரணில் அரசு மீது தங்களுக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி மாகாணசபை ஊடாக முன்னெடுத்தால் என்ன?

அதில் ஒரேயொரு பின்னடைவு இருக்கும். இந்த விடயங்களில் நம் எம்.பிக்களின் இடைத்தரகர் நிலைமைக்கு சற்றுப் பங்கம் வந்துவிடும். அவ்வளவு தான்.

'இடைத்தரகர்' பவிசா? அல்லது உண்மையான அதிகாரப் பகிர்வா? எது வேண்டும்? எம்.பிக்களே முடிவு செய்யட்டும்.

# மோடியின் உத்தியைப் பயன்படுத்தி தேர்தலில் வெல்ல ஐ.தே.க. வியூகம்!

## இதன் பின்னணியே முஸ்லிம் மீதான வன்முறை என்கிறார் இடதுசாரித் தலைவர் வாசுதேவ



கொழும்பு, மே 29

இந்தியப் பிரதமர் தேர்தலில் வெற்றி பெறக் கையாண்ட விதத்தையே ஐக்கிய தேசியக் கட்சியும் மேற்கொள்ள முயற்சிக்கின்றது. அதன் பின்னணியே முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி மீண்டும் தெரிவாகியுள்ளார் . இடம்பெற்ற பொதுத்தேர்தலில் பொது மக்களைப் பிளவுபடுத்தியே இந்தத் தேர்தல் வெற்றியை அவர் பெற்றுக்கொண்டிருக்கிறார். அதாவது இந்தியாவில் இந்து, முஸ்லிம் மக்கள் பெரிய அளவில் இருந்து வருகின்றனர். இந்த மக்களைப் பிளவுபடுத்தியே மோடி தேர்தலில் வெற்றி பெற்றார். இந்து – முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு செயற்பட்டிருந்தால் மோடி வெற்றி பெற்றிருக்கமாட்டார்.

அத்துடன் இந்தியப் பிரதமர் மோடி அமெரிக்க சார்பான கொள்கையுடையவர். அவருடைய பொருளாதாரக் கொள்கை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தும் உயர் நிலையில் இருப்பவர்களுடனே மேற்கொள்ளப்படுகின்றன. அமெரிக்காவுடனே அவருடைய நட்புறவு இருந்து வருகின்றது. மோடி ஓர் அமெரிக்க ஆதரவாளர். அதனால் அவரின் தேர்தல் வெற்றி புதுமையாகவே இருக்கின்றது.

ஏனெனில் அந்த நாட்டில் நீண்டகாலமாகப் பொது மக்கள் பக்கம் இருந்துவந்த பலவீனம் மற்றும் தொழிலற்றவர்களின் வீத அதிகரிப்பு உயர்நிலையில் உள்ளது. இவ்வாறான நிலையில் மோடியின் வெற்றி பெரிய வியாபாரிகளின் பணம் மற்றும் இந்து, முஸ்லிம் பிளவு ஆகிய இரண்டிலுமே இடம்பெற்றது.

அத்துடன் இந்து, முஸ்லிம் பிளவை ஏற்படுத்தியே மோடி தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்கின்றார். இது அரசமைப்புக்கு முரண். அதனால் இதனை நிறுத்தவேண்டும் என அந்நாட்டுத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டும் அதனை தேர்தல்கள் ஆணைக்குழு செய்யவில்லை. இதுதான் நாங்கள் கற்றுக்கொள்ள இருக்கும் பாடமாகும். அத்துடன் இனங்களுக்கிடையில் பிளவைத் தூண்டினால் அதன் மூலம் ஏற்படுவது ஏகாதிபத்திய வாதமாகும்.

அதனால் இலங்கையில் இருக்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இலங்கையர்கள் என்ற வகையில் தேசியவாதத்தை அடிப்படையாக கொண்டு ஏகாதிபத்தியவாதத்துக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்ட முடியும். அவ்வாறான ஒன்று திரட்டல் மூலமாகவே இலங்கையில் இலங்கை தேசத்தவர்கள் உருவாகும். ஆனால் இன்று ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரம் காரணமாக இலங்கையில் தேசியவாதம் ஏற்படாது.

அதனால் இந்தியப் பிரதமர் செயற்பட்டதுபோல் ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள, முஸ்லிம் பிரச்சினையை ஏற்படுத்தி அரசமைப்புக்கு முரணாக செயற்படவே முயற்சிக்கின்றது. அதனால் இந்த நிலைமைகளை கருத்திற்கொண்டு இதற்கு எதிராகப் பொதுஜன பெரமுன மக்களை தேர்தல் ஒன்றுக்காக அணி திரட்டவேண்டும். ஆனால் அதனை மேற்கொள்ள பொதுஜன பெரமுனவுக்கு இன்னும் முடியாமல்போயுள்ளது – என்றார். (ஐ)

# வடக்கு ஆளுநரைச் சந்தித்தார் புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்



யாழ்ப்பாணம், மே 29

வடமாகாணத்தின் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி விஜயகுணவர்தன ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்றுக் காலை ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது வடமாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் சமூகவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பிலும் , யாழ். மாவட்டத்திலே அதிகளவிலான சமூக விரோத செயல்கள் காணப்படுகின்றன எனவும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என வும் ஆளுநர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

மேலும் சட்டவிரோத மண்அகழ்வு நடவடிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், வடக்கு மாகாணத்தில் முக்கியமாக மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதவாறு பொலிஸார் ஏனைய பாதுகாப்பு தரப்பினருடன் இணைந்து ஆரோக்கியமான செயற்திட்டத்தை முன்னெடுக்கவேண்டும் என்றும் ஆளுநர் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்தினார். (ஐ)

# டிப்பர் – மோ. சைக்கிள் மோதி சாவகச்சேரியில் ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், மே 29

சாவகச்சேரி ஏ – 9 வீதியில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நுணாவில் பொது நூலகத்துக்கு முன்பாக நேற்று முன் தினம் இரவு 9.40 மணியளவில் இடம்பெற்றது.

டிப்பர் கனரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீசாலை மேற்கைச் சேர்ந்த மகேஸ்வரன் சுரேந்திரகுமார் (வயது 45) என்பவரே உயிரிழந்தார்.

மீசாலை மேற்கைச் சேர்ந்த கதிரேசு உதயன் (வயது 35) என்பவர் படுகாயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ)

### நாளை

30.05.2019
வியாழக்கிழமை

நட்சத்திரம்: ஏகாதசி பி.ப.04.01 வரை.
திதி : ரேவதி மு.இ.10.41 வரை.
இராகுகாலம் : 01.22 – 02.52
சுப நேரம் : 07.22 – 08.52

## ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக வவுனியா நகரில் பதாகைகள்!

வவுனியா, மே 29

அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான பதாகைகள் வவுனியாவில் கட்டப்பட்டுள்ளன.

வவுனியா மணிக்கூட்டுக் கோபுரச் சந்திக்கு அருகே நேற்று முன்தினம் பதியுதீனுக்கு எதிரான பதாகைகள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் கட்டப்பட்டுள்ளன.

'மதவாதி தேசத்துரோகி ரிஷாத் பதியுதீனை உடனடியாக நாடாளுமன்றத்திலிருந்து நீக்கவும் – வன்னி தமிழ் மக்கள்' என அதில் தமிழில் எழுதப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் தென்னிலங்கையின் பல பிரதேசங்களில் அமைச்சர் ரிஷாத்துக்கு எதிராகப் பதாகைகள் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# கொழும்புத் துறைமுக அபிவிருத்தியில் ஜப்பானுடன் கைகோர்க்கிறது இந்தியா

## சீனாவின் செல்வாக்கைச் சமப்படுத்தத் திட்டம்

கொழும்பு, மே 29

இலங்கையில் சீனாவின் செல்வாக்கைச் சமப்படுத்தும் வகையில், ஜப்பான் மற்றும் இலங்கையுடன் இணைந்து கொழும்புத் துறைமுக விரிவாக்கத் திட்டத்தை முன்னெடுக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள பா.ஜ.க அரசின் முதலாவது வெளிநாட்டுக் கொள்கை நகர்வாக இந்த முடிவு அமைந்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இது, மூன்று நாடுகளும் இணைந்து முன்னெடுக்கவுள்ள கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை முன்னெடுக்கும் விடயத்துக்கு ஊக்கமாக அமையும் என்று இந்திய ஆங்கில நாளிதழ் ஒன்று குறிப்பிட்டுள்ளது.



கொழும்புத் துறைமுகத்தின் கொள்கலன் கையாளும் திறனை அதிகரிப்பதே இந்த முத்தரப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

பிராந்தியத்தில் சீனா பல்வேறு திட்டங்களின் மூலம், தனது செல்வாக்கை உயர்த்தி வருகின்ற நிலையிலேயே இந்தத் திட்டத்தை கூட்டாக முன்னெடுக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தைக் கூட்டாக அபிவிருத்தி செய்யும் விடயத்திலும், ஜப்பானும் இந்தியாவும் கண்வைத்துள்ளன.

கொழும்புத் துறைமுகத்தின் தெற்குப் பகுதியில் உள்ள கிழக்கு கொள்கலன் முனையத்தை மூன்று நாடுகளும் கூட்டாக அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளன. இதன் மூலம், பாரிய கொள்கலன் கப்பல்கள் வரும் வாய்ப்புகள் கிடைக்கும்.

இந்தத் திட்டம் தொடர்பாக மூன்று நாடுகளின் அரசுகளும் பேச்சுக்களை நடத்தி வருகின்றன. இந்தப் பேச்சுக்களில் எட்டப்படும் இணக்கப்பாடுகளின் அடிப்படையில், அடுத்த சில மாதங்களுக்குள் உடன்பாடு கையெழுத்திடப்படும்.

இந்தத் திட்டத்துக்குத் தனியார் துறை பங்களிப்பும் கோரப்பட்டுள்ளது. (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், மே 29

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட் டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில்-**

சின்னசிப்பிக்குளம், Nuus Steel PTV LTDஆகிய இடங்களிலும் – மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் முகநூல் முடக்கப்பட்டதா?

கொழும்பு, மே 29

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அதிகாரபூர்வ முகநூல் கணக்கு, முடக்கப்பட்டு நேரலையான காணொலி ஒன்று ஒளிபரப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரபூர்வ முகநூல் கணக்கில் திடீரென நேரலை காணொலி ஒன்று பதிவேற்றப்பட்டது. ஐந்து நிமிடங்களுக்கு வாகனப் போக்குவரத்து தொடர்பான காட்சி அதில் ஒளிபரப்பப்பட்டது.

முகநூல் கணக்கினுள் நுழைந்து யாரேனும் இந்தப் பதிவை இட்டனரா அல்லது, ஜனாதிபதியின் ஊடகப் பிரிவினால் தவறுதலாக இந்தப் பதிவேற்றம் நிகழ்ந்ததா என்று சம்பந்தப்பட்ட தரப்பினரே விசாரிக்க வேண்டும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## முஸ்லிம்கள் நிலை குறித்து ரவி கருணாநாயக்க கவலை

கொழும்பு, மே 29

போர்க் காலத்தில் தமிழ் மக்கள் எவ்வாறு பார்க்கப்பட்டார்களோ அதேபோன்றதொரு நிலைமை தற்போது முஸ்லிம் மக்களுக்கும் ஏற்பட்டுள்ளதென அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையானது சிங்கள, பௌத்த நாடாக இருந்தாலும் ஏனைய சமூகத்தவர்களின் மதம், மொழி ஆகியவற்றுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனை அனைவரும் முதலில் கருத்திற்கொள்ள வேண்டும்.

இதனை ஏற்க மறுக்கும் ஒரு சிலரினாலேயே நாட்டின் ஐக்கியத்தை கட்டியெழுப்ப முடியாத நிலைமை உருவாகியுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதலை நடத்தியவர்கள் முஸ்லிம் பயங்கரவாதிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளமையினால், ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தையும் சந்தேகக் கண்ணோட்டத்தில் பார்க்கும் நிலைமை உருவாகியுள்ளமை கவலையளிக்கிறது – என்றார். (ஐ)

## குளியாப்பிட்டி சந்தேக நபர்கள் அடையாளம் காணப்படவில்லை!

கொழும்பு, மே 29

குளியாப்பிட்டி வன்முறையின்போது முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தினர் எனச் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் நால்வரும் நேற்றுமுன்தினம் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

குளியாப்பிட்டி நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஜனனி எஸ்.விஜேதுங்கவால் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, முறைப்பாட்டாளர்களால் சந்தேகநபர்கள் அடையாளம் காணப்படவில்லை.

நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாத 3 வெவ்வேறு முறைப்பாடுகள் தொடர்பில், சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்கு, இந்த மாதம் 30, 31, ஜூன் மாதம் 3ஆம் திகதி மீண்டும் சந்தேகநபர்களை முகத்தை மறைக்காமல் ஆஜர்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இவர்களின் விளக்கமறியல் ஜூன் 11ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. இவர்கள் மீது 10 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. (ஐ)

### காரைநகர் பிரதேச சபையின்

# தவிசாளரையும் செயலாளரையும் நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு

## பாரம்பரிய உணவகத்தை தனியாருக்கு வழங்கிய குற்றச்சாட்டு

காரைநகர்,மே29

காரைநகர் பிரதேச சபைத் தவிசாளரையும் செயலாளரையும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். காரைநகர் பாரம்பரிய உணவகத்தைத் தனியார் ஹோட்டல் ஒன்றுக்கு வழங்கிய குற்றச்சாட்டை விசாரிப்பதற்காகவே எதிர்வரும் ஜூன் 11 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ப.நந்தகுமார் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கின் அடிப்படையிலேயே மேற்படி இருவரையும் விசாரணைக்கு மன்றில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

வடக்கு மாகாண சபையின் ஒரு கோடி 14 லட்சம் ரூபா நிதியில் பாரம்பரிய உணவகம் அமைக்கப்பட்டது. இந்த உணவகத்தை வடக்கு மாகாணத்தின் அப்போதைய முதலமைச்சர் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி திறந்துவைத்தார்.

பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதற்காகவும் காரைநகர் கசூரினா சுற்றுலா மையத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர்வாசிகளின் நலன் கருதியும் இந்த உணவகம் அமைக்கப்பட்டது.

இந்த உணவகம் கடந்த சில தினங்களாக யாழ்.நகரில் இயங்கும் 'கொஷி ரெஸ்ரோரன்ஸ்' எனப்படும் ஹோட்டலின் பெயரில் இயங்கி வந்தது.

அங்கு சென்ற காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி சுகாதாரப் பரிசோதனையில் ஈடுபட்டபோது, முறையான சுகாதார விதிமுறைகள் பேணப்பட்டிருக்கவில்லை. முறையான அனுமதிகளும் பெறப்பட்டிருக்கவில்லை எனத் தெரியவருகின்றது. இந்த உணவகத்தை நடத்தி வந்தவர்கள், காரைநகர் பிரதேச சபையினரே இதைத் தமக்கு வழங்கினர் எனக் கூறினர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதற்காக அரச நிதியில் அமைக்கப்பட்ட இந்த உணவகத்தை தனியார் ஹோட்டல் ஒன்றுக்கு வழங்கியமை, அங்கு முறையான சுகாதார விதிமுறைகள் பேணப்படாமை போன்ற காரணங்களை முன்வைத்து காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கின் அடிப்படையில் காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோரை விசாரணை செய்வதற்காக மன்றில் ஆஜராகுமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

## றமழான் நற்சிந்தனைகள்



யா அல்லாஹ், நீ எங்களுக்கு கொடுத்துள்ளவற்றின் தீங்கிலிருந்தும், தடுத்துள்ளவற்றின் தீங்கிலிருந்தும் நாங்கள் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறோம். அனைத்தையும் நலவைக் கொண்டு பூர்த்தியாக்கி வைப்பாயாக!

**நோன்பு திறக்கும் நேரம்** மாலை 6.22

ஸஹர் முடிவு அதிகாலை 4.17

(எம்.எல்.லாபிர்)

காலைக்கதிர் Kalaikathir



# காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து விலகுவதில் ராகுல் காந்தி விடாப்பிடி!

புதுடெல்லி, மே29

**தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியை இராஜினாமா செய்யும் முடிவில் ராகுல் காந்தி உறுதியாக இருக்கிறார். தன்னை சந்தித்த மூத்த தலைவர்களிடம் கட்சிக்கு புதிய தலைவரை தேர்ந்தெடுக்கும்படி அவர் கூறினார்.**



தோல்வி குறித்து விவாதிக்க கடந்த 25 ஆம் திகதி காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தோல்விக்கு பொறுப்பேற்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தனது தலைவர் பதவியை ராஜினாமா செய்கிறார் எனவும், தனது குடும்பத்தை சேராத ஒருவரை தலைவராக நியமிக்க வேண்டும் எனவும் கூறினார்.

இதனை கட்சியின் நிர்வாகிகள் ஏற்க மறுத்தனர்.

கட்சியின் மூத்த நிர்வாகிகள் தங்கள் மகன்களுக்கு வேட்பாளர் நியமனம் கேட்டுத் தன்னை தொந்தரவு செய்தனர் எனவும் ராகுல் காந்தி கூறினார் எனத் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் கர்நாடகா மற்றும் ராஜஸ்தானில் உள்ள காங்கிரஸ் மாநில அரசுகளும் நெருக்கடியை சந்தித்து வருகின்றன. இந்த தகவலும் காங்கிரஸ் தலைவர்களை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

இதற்கிடையே சில மாநில காங்கிரஸ் தலைவர்கள்தங்கள்பதவியைராஜினாமா செய்ய தொடங்கி உள்ளனர். பஞ்சாப் மாநில தலைவர் சுனில் ஜாகர், ஜார்கண்ட் – அஜய்குமார், அசாம் –,ரிபுன் போரா, ராஜஸ்தான் – அசோக் கெலாட், உத்தரபிரதேசம் – ராஜ்பாப்பர், மராட்டியம் – அசோக் சவாண் ஆகியோர் தலைவர் பதவியை ராஜினாமா செய்துள்ளனர்.

செயற்குழுக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்வார் எனக்கூறிய ராகுல் காந்தி தனது முடிவில் உறுதியாக இருக்கிறார் எனவும் தகவல் வெளியாகி உள்ளது. அவர் யாரையும் சந்திக்க மறுக்கிறார் எனவும் கூறப்படுகிறது. தேர்தலில் வெற்றிபெற்ற புதிய எம்.பிக்கள் அவரை சந்திக்க விரும்புகின்றனர் எனக் கூறியும் ராகுல் காந்தி அவர்களைச் சந்திக்க மறுத்துவிட்டார். தனது கூட்டங்கள், சந்திப்புகள் அனைத்தையும் அவர் ரத்து செய்துவிட்டார்.

கட்சியின் தூதுவர்களாக மூத்த தலைவர்கள் அகமது பட்டேல், கே.சி.வேணுகோபால் ஆகிய இருவர் மட்டும் நேற்று முன்தினம் காலை ராகுல் காந்தியைச் சந்தித்து பேசினார்கள். அவர்கள் சமாதானத்தை ஏற்க மறுத்த ராகுல் காந்தி, தனது முடிவில் உறுதியாக இருக்கிறார் எனக்கூறியுள்ளனர்.

சவாலான இந்த நேரத்தில் கட்சியை நடத்துவதற்கு தகுதியுள்ள, தனது குடும்பத்தை சேராத, அதேசமயம் போதிய அனுபவமும், தலைமைக்குரிய தகுதியும் கொண்ட ஒரு புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும்படியும் அவர்களிடம் ராகுல் காந்தி கூறினார். அதற்குரிய நேரத்தை வழங்கவும் தாம் தயாராக இருக்கிறர் எனவும் அவர் கூறினார்.

# புதிய அமைச்சராகும் கௌதம் கம்பீருக்கு விளையாட்டுத் துறை?

*பாரதீய ஜனதாக் கட்சியின் புதிய நாடாளுமன்ற உறுப்பினரான முன்னாள் கிரிக்கெட் வீரர் கௌதம் கம்பீருக்கு மத்தியில் அமைச்சரவையில் முக்கியத் துறை -பெரும்பாலும் விளையாட்டுத் துறை- ஒதுக்கீடு செய்ய வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*கௌதம் கம்பீர் சிலவாரங்களுக்கு முன் பா.ஜ.கவில் தன்னை இணைத்துக் கொண்டார். பிரதமர் மோடியின் கொள்கையை பார்த்து பா.ஜ.கவில் தாம் இணைந்தார் என அவர் கூறி இருந்தார்.*

*கட்சியில் சேர்ந்த உடனேயே அவர் பா.ஜ.க. சார்பாக டெல்லி கிழக்கு தொகுதியில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். காங்கிரஸ் கட்சியின் அரவிந்தர் மற்றும் ஆம் ஆத்மி கட்சியின்*



*அதிஷி ஆகியோரை எதிர்த்துக் களம் கண்டார். இந்தத் தேர்தலில் அதிஷி வெற்றிபெறவே அதிக வாய்ப்புகள் இருக்கின்றன எனக் கூறப்பட்டது.*

*ஆனால் கௌதம் கம்பீர் 6.96 லட்சம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அரவிந்தர் 3.04 லட்சம் வாக்குகள் பெற்றார். கல்வியாளர் அதிஷி வெறும் 2 லட்சம் வாக்குகள் தான் பெற்றார். இதனால் தற்போது கம்பீர் முதல்முறை எம்.பி ஆகியுள்ளார்.*

*தற்போது அவர் மத்திய அமைச்சரவையில் இடம்பெற இருக்கிறார் என்றும் கூறுகிறார்கள். இவர் விளையாட்டு துறை அமைச்சராக ஆசைப்பட்டு உள்ளார். தற்போது மத்திய விளையாட்டுத் துறை அமைச்சராக ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் இருக்கிறார்.*

*இந்த நிலையில் கம்பீருக்கு விளையாட்டுத் துறையை ஒதுக்க பா.ஜ.க. முடிவெடுத்து இருப்பதாகத் தெரிகிறது. டெல்லியில் இருந்து இரண்டு அமைச்சர்களை தேர்வு செய்ய பாஜக திட்டமிட் டுள்ளது. அதில், கம்பீர் கண்டிப்பாக இடம் பெறுவார் என்று கூறுகிறார்கள்.*

# இந்திய நாடாளுமன்றுக்கு இம்முறை அதிக பெண்கள்

இந்திய வரலாற்றில் அதிக பெண் எம்.பிக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவையாக தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட 17ஆவது மக்களவை இருப்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் பிரசாரத்தின்போது பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதாக வாக்களித்த எந்த கட்சியும் வேட்பாளர் பட்டியலில் அதனை நடைமுறைப்படுத்தவில்லை. இந்தியா முழுவதும் போட்டியிட்ட 8 ஆயிரத்து 40 வேட்பாளர்களில் 716 பேர் மட்டுமே பெண் வேட்பாளர்கள், இதில் 78 பேர் மட்டுமே வெற்றிப்பெற்றுள்ளனர்.

சுதந்திர இந்தியாவில் இம்முறை தான் அதிக பெண்கள் மக்களவைக்கு தேர்வாகி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1952ல் அமைக்கப்பட்ட முதல் நாடாளுமன்றத்தில் 5 சதவீதமாக இருந்த பெண் உறுப்பினர்களின் பங்கு தற்போது 14 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பெண்களுக்கான அரசியல் பங்களிப்பு அதிகரித்திருக்கிறது என இந்தியா பெருமை கொள்ள முடியாத வகையில் தெற்கு ஆசியாவின் சராசரி விகிதம் இருக்கிறது. உலக அளவில் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதம் 24.3 ஆகவும், தெற்கு ஆசியா அளவில் 18 வீதமாகவும் உள்ளது.


இந்தியாவால் தெற்காசியாவின் சராசரியை கூட அடைய முடியாததற்கு, அங்கு உள்ள ஆணாதிக்கத்தை காரணமாக சொல்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள். பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீடு கோரும் சட்டப் பிரேரணை நாடாளுமன்றத்தில் 10 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் உள்ளது. இந்த பிரேரணையில் உள் ஒதுக்கீட்டை காரணம் காட்டி பாஜக, சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் ஆகிய கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.


நடந்து முடிந்த தேர்தலில் சில கட்சிகள் தங்கள் வேட்பாளர் பட்டியலிலேயே பெண்களுக்கான இடஒதுக்கீட்டை கடைப்பிடித்துள்ளன. தமிழகத்தில் நாம் தமிழர் கட்சி 50 சதவீதம் பெண்களுக்கு என ஒதுக்கியது. அதே போல் மம்தாவின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி 41சதவீதமும், ஒடிசாவில் பிஜு ஜனதாதளம் 33சதவீதம் பெண் வேட்பாளர்களை அறிவித்தன.

காங்கிரஸும் பாஜகவும் பெண்களுக்கு 12 சதவீதம் மட்டுமே வாய்ப்பளித்துள்ளன குறிப்பிடத்தக்கது.

பெண்களை பிரதிநிதிகளாக கொண்ட தொகுதிகள் பொருளாதார ரீதியாக வளர்ச்சி அடைவதாக ஐ.நா நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. இருப்பினும் இந்தியாவில் உள்ள அரசியல் கட்டமைப்பு, தகுதியான பெண்களுக்கு வாய்ப்பளிப்பது இல்லை என்கிறது இந்த ஆய்வு.

# குடிசை வீடு, சைக்கிளே வாகனம் நாடாளுமன்றில் புதிய சந்நியாசி





எளிமையாக வாழ்ந்து, கிராமப்புற மக்கள் சேவைக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்ட ஒருவர், ஒடிசா மாநிலத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

64 வயதான இந்த சந்நியாசி, ஒடிசாவின் பால சோர் தொகுதியின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்.

மண் குடிசைதான் வீடு, சைக்கிளில்தான் பயணம். இப்படி எளிய வாழ்க்கையைக் கடைபிடித்து வரும் பிரதாப் சந்திர சாரங்கியை, ஒடிசாவின் மோடி என்று அழைக்கின்றனர் அப்பகுதி மக்கள்!

ஆன்மிகத்தில் நாட்டம் கொண்ட பிரதாப் சந்திர சாரங்கி, இளம் பருவத்தில் ராமகிருஷ்ண மடத்தில் சேர்வதற்காக சென்றுள்ளார். அவரைப் பற்றி விசாரித்த மடத்தின் நிர்வாகிகள், விதவைத் தாயின் ஒரே மகன் என்பதை அறிந்து, தாயைக் கவனிக்குமாறு அறிவுரை வழங்கி அனுப்பிவிட்டனர்.

வறுமையில் வாடிய சாரங்கி பட்டப்படிப்பை முடித்தபின், குடும்ப வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்காமல் சமூகநலப் பணிகளை மேற்கொண்டார். பாலசோர் மற்றும் மயூர்பஞ்ச் மாவட்டங்களில் பழங்குடி மக்களுக்காக சமர் கரா கேந்திரா என்ற பெயரில் ஏராளமான பள்ளிகளைத் திறந்துள்ளார்.

மலைவாழ் மக்கள் வசிக்கும் கிராமங்களுக்கு சைக்கிளிலேயே செல்லும் இவர், மது, ஊழல், காவல்துறை அத்துமீறல் ஆகியவற்றுக்கு எதிராக, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தார்.

நிலகிரி என்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இரண்டுமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட போதும், ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்படவோ, பணம் சம்பாதிப்பதில் ஆர்வமோ இன்றி இருந்துள்ளார். கடந்த மக்களவைத் தேர்தலில் பாலசோர் தொகுதியில் தன்னைத் தோற்கடித்த கோடீஸ்வர வேட்பாளர் பிரேந்திர குமார் ஜேனா என்பவரை, இம்முறை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்.

எம்.பி.யாகப் பதவியேற்க டெல்லி புறப்பட்டபோது, ஒரு சிறிய பையில்தான் தன்னுடைய உடைமைகளை எடுத்துச் சென்றார் சாரங்கி! வேட்பாளர் நியமனம் வாங்கவும், வாக்காளர்களுக்குக் கொடுக்கவும், பிரச்சாரத்திற்கும் கோடிகளைச் செலவிடும் கட்சியினருக்கு மத்தியில், எளிமையான வாழ்க்கை வாழ்ந்து தனது தொகுதி மக்களின் உண்மைப் பிரதிநிதியாக நாடாளுமன்றத்தில் அடியெடுத்து வைக்கிறார் பிரதாப் சந்திர சாரங்கி.

காலைக்கதிர் Kalaikathir



# கொங்கோவில் படகு கவிழ்ந்து கோர விபத்து 45 பேர் பலி; இரு நூறு பேரைக் காணவில்லை

கின்ஷாசா, மே29

**கொங்**கோ நாட்டில் ஏரியில் படகு கவிழ்ந்த விபத்தில் சிக்கி 45 பேர் பலியாயினர். மேலும் இருநூறுக்கும் அதிகமானோரைக் காணவில்லை. மத்திய ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கொங்கோ நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள மாய் நேடம்போ மாகாணத்தின் தலைநகர் இனான்கோவில் மிகப்பெரிய ஏரி ஒன்று உள்ளது. இனான்கோவில் சாலை வசதிகள் சரிவர இல்லாதமையால் பெரும்பாலான மக்கள் படகுப் போக்குவரத்தையே பிரதானமாகக் கொண்டுள்ளனர்.





இந்த நிலையில், கடந்த சனிக்கிழமை இரவு இந்த ஏரியில் 300 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் படகு ஒன்று சென்றுகொண்டிருந்தது. இந்தப் படகில் 183 பேர் மட்டுமே அமர்ந்துசெல்ல அனுமதி உள்ளநிலையில், அளவுக்கு அதிகமான பயணிகளோடு, சரக்குகளையும் ஏற்றிச் சென்றுள்ளனர்.

இதனால் பாரம் தாங்காமல் படகு திடீரென ஏரியில் கவிழ்ந்தது. இதில் படகில் இருந்த அனைவரும் நீரில் மூழ்கினர். இந்த கோர விபத்தில் 12 பெண்கள், 11 குழந்தைகள் உட்பட 45 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 200 க்கும் மேற்பட்டோர் மாயமாகி உள்ளனர். அவர்களின் கதிஎன்னஎன்பதுதெரியவில்லை.

இது குறித்து இனான்கோ நகர மேயர் சைமன் எம்பிவோ வெம்பா கூறுகையில், படகு விபத்தில் பலியாகினர் எனக் கூறப்படும் மக்களின் எண்ணிக்கைதற்காலிகமானதுதான். இது மேலும் அதிகரிக்கக்கூடும். படகில் இருந்த பயணிகளின் சரியான எண்ணிக்கையையும் தெரிந்துகொள்வது தற்போது கடினமாக உள்ளது. எனினும் காணாமல் போனவர்களை மீட்கும் முயற்சிகள் தொடர்ந்து நடக்கின்றன எனக் கூறினார்.

## ஒக்லஹோமாவைத் தாக்கிய சூறாவளியில் அறுவர் மரணம்

வொஷிங்டன், மே29

அமெரிக்காவில் சூறாவளி தாக்கியதில் 6 பேர் உயிரிழந்தனர். அமெரிக்காவின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள ஒக்லஹோமா மாகாணம் தொடர் இயற்கை சீற்றங்களால் உருக்குலைந்து போய் உள்ளது. அங்கு கடந்த சில நாள்களில் மட்டும் பல முறை புயல், சூறாவளி தாக்கி உள்ளன.



மேலும் புயல், சூறாவளி காரணமாகத் தொடர் கனமழை கொட்டித் தீர்த்ததால் அங்குள்ள பல்வேறு நகரங்கள் வெள்ளக்காடாகி உள்ளன.

இந்த நிலையில், ஒக்லஹோமா மாகாணத்தில் ஞாயிறு இரவு மற்றொரு சக்திவாய்ந்த சூறாவளி தாக்கியது. இதில் அங்குள்ள எல்ரெனோ, மாயிஸ், பியானே மற்றும் ஸ்டீபன்ஸ் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் கடும் பாதிப்புக்குள்ளாகின. வீடுகள் உள்ளிட்ட ஏராளமான கட்டடங்கள் இடிந்து, விழுந்து தரைமட்டமாகின. சாலைகள் பலத்த சேதம் அடைந்தன. மின் இணைப்பு மற்றும் தகவல் தொடர்பு உள்ளிட்டவையும் துண்டிக்கப்பட்டன. சூறாவளி தாக்கியதில் ஒரு பெண் உள்பட 6 பேர் உயிரிழந்தனர். மேலும் 29 பேர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பாதிப்புக்குள்ளான பகுதிகளில் முழுவீச்சில் மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன.

## கத்திக்குத்துத் தாக்குதலில் மாணவி உட்பட மூவர் பலி!

### 16 மாணவர்கள் காயம்

டோக்கியோ, மே29

ஜப்பான் டோக்கியோ அருகே பேருந் துக்காக காத்திருந்த பள்ளி மாணவர்களை ஒருவர் கத்தியால் குத்தியதில் மாணவி உட்பட மூன்று பேர் பலி ஆயினர். டோக்கியோவுக்கு தெற்கே உள்ள நகர மான கவாசகியில் இந்த தாக்குதல் நடந்தது.

இந்தத் தாக்குதலில் 18 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில், பள்ளி மாணவி மற்றும் 39 வயதுடைய ஒருவர் உட்பட இரண்டு பேர் பலி ஆனார்கள். ஐம்பது வயது மதிக்கத்தக்க அந்த நபர், மாணவர்களைத் தாக்கிவிட்டு பின் தன் கழுத்தை அறுத்து கொண்டார்.

அவரை பொலிஸார் கைது செய்தனர். பின்னர், அவரும் இறந்துவிட்டார்.

இந்தத் தாக்குதலுக்கான காரணம் இன்னும் தெரியவில்லை. காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் 16 பேரும் பள்ளி மாணவிகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திலிருந்து இரு கத்திகள் கைப்பற்றப்பட்டுள்ளன.




## பிரேசில் சிறையில் கலவரம் 15 கைதிகள் உயிரிழந்தனர்

பிரேசிலியா, மே29

பிரேசிலில் கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட பயங்கரக் கலவரத்தில் 15 பேர் பலியாகினர்.

பிரேசில் உலகிலேயே அதிக சிறைக்கைதிகளை கொண்ட 3ஆவது நாடாகத் திகழ்கிறது. கடந்த ஏப்ரல் மாத கணக்கெடுப்பின்படி அந்நாட்டில் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 305 கைதிகள் இருக்கிறார்கள்.

இதனால் அங்குள்ள சிறைகளில் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட இருமடங்குஅதிகமான கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.



இதன் காரணமாக பிரேசில் சிறைகளில் கைதிகளுக்கு இடையே வன்முறை மற்றும் கலவரங்கள் மூள்வதும், சிறையை தகர்த்து தப்பி ஓடும் முயற்சிகளும் அவ்வப்போது நடக்கின்றன.

இந்த நிலையில், அந்நாட்டின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள அமேசோனஸ் மாகாணத்தின் தலைநகர் மனாவுசில் உள்ள சிறையில் ஞாயிறன்று கைதிகளுக்கு இடையே பெரும் கலவரம் வெடித்தது.

உள்ளூர் நேரப்படி காலை 11 மணியளவில் பார்வை நேரத்தின்போது, இரு தரப்பு கைதிகள் இடையே திடீரென கைகலப்பு ஏற்பட்டது. இருதரப்புக்கும் ஆதரவாக ஏராளமான கைதிகள் திரண்டமையால் கைகலப்பு, பெரும் கலவரமாக மாறியது.

பல் துலக்கும் 'டூத்பிரஸ்', சாப்பிடும் தட்டுகள் உள்ளிட்டவற்றை கொண்டு கைதிகள் ஒருவரை ஒருவர் சரமாரியாகத் தாக்கிக்கொண்டனர்.

இதனால் சிறையில் பதற்றமான சூழல் உருவானது. கைதிகளை பார்க்க வந்திருந்தவர்கள் மத்தியில், பெரும் பதற்றமும், பீதியும் தொற்றிக்கொண்டது.

இதையடுத்து, சிறைக்காவலர்கள் அவர்கள் அனைவரையும் பத்திரமாகச் சிறையில் இருந்து வெளியேற்றினர். அதனைத் தொடர்ந்து, கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டனர்.

ஆனால் கைதிகள் கடும் கொந்தளிப்புடன் காணப்பட்டமையால் கலவரத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. இதையடுத்து, கலவரத் தடுப்புப் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

அவர்கள் நீண்ட நேரம் போராடி கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். எனினும் முன்னதாக இந்தக் கலவரத்தில் 15 கைதிகள் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். கைதிகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டதற்கான காரணம் குறித்துப் பொலிஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இதே சிறையில் கைதிகளுக்கு இடையே சுமார் 20 மணிநேரத்துக்கு மேலாக நடைபெற்ற பயங்கர மோதலில் 56 பேர் கொல்லப்பட்டமை நினைவுகூரத்தக்கது.

## ஈரானில் ஆட்சி மாற்றத்தை அமெ. விரும்பவில்லையாம்!



டோக்கியோ, மே29

ஈரானில் நாங்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பவில்லை என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரான் உடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து கடந்த ஆண்டு அமெரிக்கா விலகியது முதல், இருநாடுகளுக்கும் இடையே மோதல் நீடிக்கிறது. ஈரான் மீது கடும் பொருளாதாரத் தடைகளை விதித்ததோடு, அந்நாட்டிடம் இருந்து மசகு எண்ணெயை வாங்க பிற நாடுகளுக்கு அமெரிக்கா தடையும் விதித்தது. இதனால், ஈரானின் பொருளாதாரம் பெரும் சரிவைச் சந்தித்துள்ளது.

மேலும், ஈரானை எச்சரிக்கும் வகையில் மத்திய கிழக்கு பகுதியில் அமெரிக்கா தனது போர் கப்பல்கள், போர் விமானங்கள் மற்றும் தளவாடங்களை குவித்து இருக்கிறது. இதனால் இருநாடுகள் இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டு இருக்கிறது.

இந்த நிலையில், ஜப்பானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், அந்நாட்டின் பிரதமர் ஷின்ஜோ அபே உடனான சந்திப்புக்கு பிறகு பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் ஈரான் விவகாரம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதில் அளித்து பேசிய டிரம்ப், நாங்கள், ஈரானில் ஆட்சி மாற்றத்தை விரும்பவில்லை. அந்நாட்டில் அணுஆயுதங்கள் இல்லாது இருப்பதையே நாங்கள் விரும்புகிறோம் என்பதை தெளிவுபடுத்த கடமைப்பட்டுள்ளேன். ஈரானைக் காயப்படுத்தும் நோக்கம் எங்களுக்கு இல்லை. இருதரப்பு இடையே ஒருமித்த ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதே சிறந்தது. அவர்கள் பேச்சுக்குத் தயார் என்றால், நாங்களும் தயாராக இருக்கிறோம் என கூறினார்.

காலைக்கதிர் Kalaikathir





# இந்திய அரசியலில் திருப்பங்கள்;

# குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டி விட்டாரா பிரதமர் மோடி?

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் நரேந்திர மோடியின் வெற்றி, முன்னெப்போதுமில்லாத பல கேள்விகளை எழுப்பி உள்ளது.

இதற்கு காரணமாக பல்வேறு விஷயங்கள் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக, தனது இளமைக் காலத்தின்போது குடும்பத்தில் நிலவிய வறுமையின் காரணமாக, தேநீர் விற்றது போன்ற மோடி தனது வாழ்க்கை குறித்து விளக்கும் விடயங்கள் மில்லியன்கணக்கான இந்தியர்களுக்கு தத்தமது வாழ்க்கையுடன் பொருந்தி பார்க்க வைக்கிறது என்று கூறலாம்.

எனவே, மக்கள் தன்னை போன்ற ஒருவர், தனக்கு ஆதரவாக போராடவும், பேசவும் இருக்கிறார் என்று மோடியை பார்க்கிறார்கள்.

அதே சூழ்நிலையில், தான் மிகப் பெரிய அரசியல்வாதிகள், பணக்காரர்கள் மற்றும் அதற்கு மேல் மிகவும் முக்கியமாக, நாட்டின் மிகப் பெரிய அரசியல் பணியாக விளங்கும் குடும்ப ஆட்சிக்கு எதிராக தான் போராடியதாக நரேந்திர மோடி கூறுகிறார்.

2014ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது, நரேந்திர மோடி தற்போதைய காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியை 'இளவரசர்' என்றே பல இடங்களில் முழங்கினார்.

அதாவது, இந்தியா 1947இல் சுதந்திரமடைந்தது முதல், அதன் வரலாற்றில் பெரும்பாலான காலம் ஆட்சி செய்த நேரு – காந்தி குடும்பத்தினரை மையப்படுத்தியே மோடி அதனைக் குறிப்பிட்டார்.

ஆனால், தற்போது நிலைமை தலைகீழாகிவிட்டது.

காங்கிரஸ் கட்சி மீண்டுமொருமுறை, மோசமான தோல்வியைச் சந்தித்து இருப்பதால், அதன் தலைவர் ராகுல் காந்தி நிச்சமற்ற எதிர்காலத்தை எதிர்நோக்கி இருக்கிறார்.

காந்தி குடும்பத்தினரின் கட்டுப்பாட்டில் காலங்காலமாக இருந்து வரும் அமேதி தொகுதியில் இந்தாண்டு பா.ஜ.கவின் ஸ்மிரிதி இராணியிடம் ராகுல் காந்தியை தோற்றது நிலைமையை இன்னும் மோசமாக்கியுள்ளது.

ஆனால், நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலை பொறுத்தவரை, காங்கிரஸ் கட்சி மட்டுமின்றி இந்தியா முழுவதுமுள்ள பல்வேறு கட்சியின் குடும்ப அரசியலும் அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது.

2004 முதல் 2014ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 30 சதவீத உறுப்பினர்கள் குடும்ப அரசியலை பின்னணி



யாகக் கொண்டவர்கள் என்று திரிவேதி அரசியல் தரவு ஆய்வு மையம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், நடந்து முடிந்த தேர்தலில் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சியினரின் தோல்வி, இந்தியாவில் குடும்ப அரசியல் இன்னமும் எடுபடுகிறதா என்ற கேள்வியை உண்டாக்கியுள்ளது.

> “மோடியின் புத்திசாலித்தனமான நடவடிக்கை இந்தியாவின் அரசியல் படிநிலையையே தலைகீழாக மாற்றியமைத்துவிட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் முதல் சில தசாப்தங்களுக்கு குறிப்பிட்ட சில குடும்பத்தின் பெயரே உச்சரிக்கப்பட்டது. ஆனால், சமீப காலத்தில் அந்த அமைப்பு முறை முற்றிலுமாக மாறிவிட்டது. இதற்கு உதாரணமாக அமேதியில் ராகுல் காந்தியின் தோல்வியைக் குறிப்பிடலாம்.”

இந்தியாவின் மிகப் பெரிய மக்கள் தொகையை கொண்ட மாநிலமான உத்தரப் பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் ஒருமுறை என்னிடம் இவ்வாறு கூறினார் – 2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் சமாஜ்வாதி கட்சி தோற்றால் நான் வேறொரு வேலையை பார்க்க வேண்டியிருக்கும் என்று கூறினார்.

நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெறுவதற்குரிய அனைத்து முயற்சிகளையும் அவர் எடுத்தார்.

குறிப்பாக, அவரது கட்சியின் முக்கிய அரசியல் எதிராளியாக பார்க்கப்பட்ட மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியுடன் கூட்டணியை ஏற்படுத்தினார்.

தான் போட்டியிட்ட தொகுதியில் அகிலேஷ் வெற்றியடைந்துவிட்டார். ஆனால், அவரது கூட்டணி பெரும்பாலான தொகுதிகளில் படுதோல்வியைச் சந்தித்தது. அதாவது, உத்தரப் பிரதேசத்திலுள்ள 80 மக்களவைத் தொகுதிகளில் 62இல் பாஜக வெற்றியடைந்தது. இதற்கு முன்னதாக, கடந்த 2017ஆம் ஆண்டு நடந்த உத்தரப் பிரதேச மாநில சட்டமன்றத் தேர்தலிலும் தனது ஆட்சியை பாஜகவிடம் அகிலேஷ் பறிகொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அம்மாநிலத்தின் கண்னுஜ் என்ற தொகுதியில் போட்டியிட்ட அகிலேஷின் மனைவி டிம்பிள் யாதவ் தோல்வியடைந்தார்.

அகிலேஷுக்கும் அவரது தந்தையும், இந்தியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சராகவும், உத்தரப் பிரதேசத்தின் முதலமைச்சராக மூன்று முறை இருந்தவருமான முலாயம் சிங்யாதவுக்கும் இடையே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய பதவி போட்டிக்கான நாடகம் அம்மாநில மக்களிடையே கட்சிக்கு அவப்பெயரை உண்டாக்கியது.

இந்நிலையில், தனது மகனுடன் நிலவிய கருத்து வேறுபாட்டால் தனித்திருந்த முலாயம், நடந்து முடிந்த மக்களைவைத் தேர்தலுக்கு சற்று முன்னதாக அகிலேஷுக்கு ஆதரவாக களமிறங்கினார். முலாயமுக்கும் அகிலேஷுக்கும் இடையே நிலவிய இந்த மோதலை கையில் எடுத்துக் கொண்ட பாஜக, உத்தரப் பிரதேசத்தின் காங்கிரஸ்தான் சமாஜ்வாதி என்றும், மக்கள் அக்கட்சியை ஆதரிக்கக் கூடாது என்றும் வலுவான பிரசாரத்தை முன்னெடுத்தது.

குடும்ப அரசியல் என்பது இந்தியாவில் மட்டுமே காணப்படும் ஒன்றல்ல. தென்கிழக்கு ஆசிய நாடுகளான வங்கதேசம், பாகிஸ்தான், இலங்கையில் குடும்ப அரசியல் என்பது சர்வ சாதாரணமான ஒன்றாக உள்ளது.

மேற்கூறிய நாடுகள் மட்டுமின்றி, அமெரிக்கா, கனடா போன்ற மேற்கத்திய



## பல மாநிலங்களில் நிலைமை இதுதான்

நாடுகளின் உட்சபட்ச பதவிகளிலும் தந்தை – மகன்கள் அரியணையில் அமர்ந்துள்ளார்கள்.

சரியான நேரத்தில், சரியான விடயத்தை முன்னிறுத்துவது அரசியலில் மிகவும் முக்கிய ஒன்று என்று கூறுகிறார் கண்ட்ரோல் ரிஸ்க்ஸ் எனும் ஆலோசனை நிறுவனத்தின் ஆசிய பிராந்தியத்துக்கான இணை இயக்குநர் ப்ரட்யூஸ் ராவ்.

மோடியின் புத்திசாலித்தனமான நடவடிக்கை இந்தியாவின் அரசியல் படிநிலையையே தலைகீழாக மாற்றியமைத்துவிட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் முதல் சில தசாப்தங்களுக்கு குறிப்பிட்ட சில குடும்பத்தின் பெயரே உச்சரிக்கப்பட்டது. ஆனால், சமீபகாலத்தில் அந்த அமைப்பு முறை முற்றிலுமாக மாறிவிட்டது. இதற்கு உதாரணமாக அமேதியில் ராகுல் காந்தியின் தோல்வியைக் குறிப்பிடலாம்.

உத்தரப் பிரதேசத்தை போன்று, பீகாரில் அதன் உள்ளூர் குடும்ப அரசியல் கட்சியும் நடந்து முடிந்த தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்துள்ளது.

முன்னாள் மத்திய அமைச்சரான லாலு பிரசாத் ஊழல் குற்றச்சாட்டில் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்தபோது, அவரது ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சியை அவரது மகன் தேஜஸ்வி யாதவ் கைப்பற்றினார்.

அடிப்படையில் கிரிக்கெட் வீரரான தேஜஸ்வி, மாநில கிரிக்கெட் அணிக்காகவும், ஐபிஎல் தொடரிலும் இடம்பெற்றுள்ளார். ஆனால், அவரால் கிரிக்கெட்டில் குறிப்பிடத்தக்க அளவுக்கு சோபிக்க முடியாததை அடுத்து, தனது தந்தையின் வழியை பின்பற்றத் தொடங்கினார்.

மோடியை போன்றே அடிமட்டத்தில் இருந்து வளர்ந்து வந்த ஒருவராக லாலுவை அம்மாநில மக்கள் கருதினர். ஆனால், அரசியலுக்கு ஏற்ப தன்னை இன்னமும் தகவமைத்து வரும் தேஜஸ்வியை முன்னிறுத்தி பிரசாரம் செய்தது பலத்த அடியை கொடுத்தது. பீகாரில் மொத்தமுள்ள 40 மக்களவைத் தொகுதிகளில் ஒரேயொரு தொகுதியில்தான் ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சியால் வெற்றிபெற முடிந்தது.

### தேஜஸ்வி யாதவ்

இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும், இதை ஒட்டிய சம்பவங்கள் பல நடந்தன. மத்தியப் பிரதேசத்தை முன்னொரு காலத்தில் ஆண்ட வம்சத்தைச் சேர்ந்தவரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான மாதவராவ் சிந்தியாவின் மகனான ஜோதிராதித்ய சிந்தியா தான் போட்டியிட்ட தொகுதியில் தோல்வியடைந்தார்.

அதேபோன்று, ராஜஸ்தானில் அசோக் கெலாட்டுக்கும், மும்பையில் தியோரா குடும்பத்துக்கும் மக்கள் அதிர்ச்சியளித்தனர்.

தென்னிந்தியாவை பொறுத்தவரை, கர்நாடகாவில் அம்மாநில முதலமைச்சர் குமாரசாமியின் மகன் நிகில் குமாரசாமி அவரை எதிர்த்து போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளரிடம் தோல்வியடைந்தார்.

இந்திய அரசியலை பொறுத்தவரை, குடும்ப அரசியலில் ஈடுபட்டுள்ளவர்கள் மகன்கள் தோற்பது என்பது அடிக்கடி நடக்கும் சம்பவமல்ல. ஒரே சமயத்தில், நாடு முழுவதும் குடும்ப அரசியலில் ஈடுபட்டுள்ளவர்கள் பெருமளவில் தோல்வியடைவதற்கு காரணமாக மோடியின் அரசியல் உத்திகளே பலராலும் முன்னிறுத்தப்படுகின்றன.

ஆனால், பாஜகவில் குடும்ப அரசியலே இல்லையென்று சொல்லிவிட முடியாது.

### ஜோதிராதித்ய சிந்தியா

இமாச்சலப் பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் அனுராக் தாக்கூரின் மகனான பிரேம் குமார் துமால் அம்மாநிலத்தின் ஹமிர்பூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார்.

அதே சூழ்நிலையில், ஆந்திரப் பிரதேசத்தில் அதன் மறைந்த முன்னாள் முதல்வரான வை. எஸ். ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன் மோகன் ரெட்டி தலைமையிலான வை. எஸ். ஆர். காங்கிரஸ் கட்சி மக்களவைத் தேர்தல் மட்டுமின்றி, அதனுடன் ஒன்றாக நடத்தப்பட்ட சட்டமன்றத் தேர்தலிலும் பெரும் வெற்றிபெற்றது.

அதேபோன்று, தமிழ்நாட்டின் மறைந்த முன்னாள் முதல்வரான கருணாநிதியின் மகன் ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகம் மக்களவைத் தேர்தலில் பெரும் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.குடும்ப ஆட்சியை மேற்கொண்ட பல கட்சிகள் தோற்ற இந்தத் தேர்தலில் ஜெகன் மற்றும் ஸ்டாலின் ஆகியோர் மட்டும் விதிவிலக்குகள்.

எனவே, இதன் மூலம் இந்தியாவில் குடும்ப அரசியல் முடிவுக்கு வந்துவிட்டது என்று கூறலாமா? என்று ப்ரட்யூஸ் ராவிடம் கேட்டபோது, ஆம், ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும்தான் என்று கூறுகிறார்.

இவ்வளவு குறுகிய காலத்தில், இந்தியாவில் குடும்ப அரசியல் முடிவுக்கு வந்துவிட்டதா என கூற முடியாது. இப்போது கூட பா.ஜ.க. உள்ளிட்ட பல கட்சியினர் குடும்ப அரசியலை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், அரசியல் தலைவர்கள் தங்களது குடும்பத்தினரின் பெயரை மட்டுமே பயன்படுத்தி தேர்தலில் இனி வெற்றிபெற முடியாது என்பதையே இது காட்டுகிறது என்று அவர் கூறுகிறார்.

**விகாஸ் பாண்டே**
**பி.பி.ஸி**

# இலங்கைப் படைகளுக்கு பீஜிங்கில் சிறப்பு பயிற்சி!

## சீனாவின் திட்டங்களைப் பாதுகாப்பதற்காக

கொழும்பு, மே 29

*சீனாவுடன் அண்மையில் செய்து கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டுக்கு அமைய, இலங்கை இராணுவ மற்றும் பொலிஸ்துறையைக் கொண்ட முதலாவது அணி பயிற்சிக்காக அடுத்த வாரம் பீஜிங் செல்லவுள்ளது.*

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அண்மைய சீனப் பயணத்தின் போது, சீன அதிபர் ஷி ஜின்பிங்குடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து, மே 14ஆம் திகதி இந்த பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

திட்டங்கள் முன்னெடுக்கப்படும் இடங்களுக்குப் பாதுகாப்பு வழங்குதல் உள்ளிட்ட விடயங்களை கொண்டதாக இந்தப் பயிற்சிகள் அமைந்திருக்கும் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து சீனத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தகவல் வெளியிடுகையில் –



இலங்கைப் படையினரின் மற்றும் பொலிஸாரின் ஆற்றலைக் கட்டியெழுப்பும் உதவிகளையும், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான கருவிகளையும் சீனா வழங்கும்.

பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் முதல் தொகுதியினருக்கான பயிற்சித் திட்டம் அடுத்த வாரம் ஆரம்பமாகும்.

நாங்கள் எமது இராணுவத்தினரை இங்கு அனுப்பப் போவதில்லை. அதற்குப் பதிலாக, இலங்கைப் படையினரின் ஆற்றலை கட்டியெழுப்பவுள்ளோம்.

எமது பாதுகாப்பை அவர்கள் மேற்கொள்வார்கள் என்று நம்புகிறோம். எனவே, எமது படையினரை இங்கு அனுப்ப வேண்டிய தேவை இல்லை. இது எமது கொள்கை இல்லை. இதற்கு மேலதிகமாகவும் எம்மிடம் பயிற்சி வாய்ப்புகள் உள்ளன – என்றார்.

# யாழ். நகரில் திருட்டு மின்சாரத்தில் உல்லாசமாக வாழ்ந்தது குடும்பம்!

## குற்றவாளியான பெண்ணுக்கு தண்டனை

யாழ்ப்பாணம், மே 29

இலங்கை மின்சார சபையின் மின் வழங்கலை மோசடியாகப் பயன்படுத்தி உல்லாசமாக வாழ்ந்து சபைக்கு 11 லட்சத்து 37 ஆயிரம் ரூபா இழப்பை ஏற்படுத்திய பெண்ணைக் கடுமையாக எச்சரித்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ். பீற்றர் போல், 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து விடுவித்தார்.

அத்துடன், மின்சார சபைக்கு ஏற்பட்ட 11 லட்சம் ரூபா 37 ஆயிரம் ரூபா இழப்பை ஒரு வாரத்துக்குள் செலுத்தி முடிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பொது மக்களின் பாவனைக்குச் செல்லும் மின்சாரத்தைச் சூறையாடிய குற்றத்துக்கு மன்னிப்பளிக்க முடியாது. இதே தவறை மீண்டும் செய்தால் சிறைத் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவீர்கள் என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ். பீற்றர் போல், குற்றவாளியை எச்சரித்தார்.

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் உள்ள குடியிருப்பாளர் ஒருவருக்கு இலங்கை மின்சார சபையின் மின் வழங்கல் இணைக்கப்பட்டிருந்தது. அந்தக் குடியிருப்பைப் பொலிஸாரின் உதவியுடன் சோதனை செய்தபோது, மின் கட்டணமானியில் மோசடி செய்யப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

அதனடிப்படையில் வாடிக்கையாளரின் வீடு சோதனையிடப்பட்டது. அங்கு காணப்பட்ட மின் சாதனங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு மின்சார சபைக்கு 11 லட்சத்து 35 ஆயிரம் ரூபா இழப்பு ஏற்பட்டது கண்டறியப்பட்டது.

அதனடிப்படையில் கடந்த மாதம் வாடிக்கையாளரான பெண், யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டு வழக்கு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் ஏ.எஸ். பீற்றர் போல் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

மின்சாரத்தை மோசடியாகப் பயன்படுத்தி மின்சார சபைக்கு 11 லட்சத்து 37 ஆயிரம் ரூபா இழப்பை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுப் பத்திரத்தைப் பொலிஸார் தாக்கல் செய்தனர். சந்தேகநபரான பெண் குற்றத்தை ஏற்றுக்கொள்கிறார் எனக் கூறினார்.

குற்றவாளியின் குடியிருப்பு உல்லாச மாளிகை. அங்கு 4 குடும்பங்கள் வசிக்கின்றன. நான்கு அறைகளுக்கு வளிச்சீராக்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. வீட்டின் நடுவே சினிமா தியேட்டர் அமைக்கப்பட்டிருந்தது என்று பொலிஸார் கூறினர்.

பொது மக்களின் பாவனைக்குச் செல்லும் மின்சாரத்தை சூறையாடிய குற்றத்துக்கு மன்னிப்பளிக்க முடியாது. இதே தவறை மீண்டும் செய்தால் சிறைத் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவீர்கள். இந்தக் குற்றத்துக்கு சாதாரணமாக 10 ஆயிரம் தண்டப் பணம் அறவிடப்படும். ஆனால் இது பாரதூரமானது என்பதால் 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படுகிறது.

தண்டப்பணம் இன்று (நேற்று) உடனடியாக மன்றில் செலுத்தப்படவேண்டும். மின்சார சபைக்கு ஏற்பட்ட 11 லட்சத்து 37 ஆயிரம் ரூபா இழப்பை ஒரு வாரத்துக்குள் செலுத்தப்படவேண்டும் வழக்கு வரும் 6ஆம் திகதி கூப்பிடப்படும். அன்றைய தினம் மின்சார சபைக்குச் செலுத்திய இழப்பீட்டுக்கான பற்றுச்சீட்டை மன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ். பீற்றர் போல் கட்டளையிட்டார். (ஐ)

# ஜூன் 22 முதல் ஜூலை 01 வரை போதைப்பொருள் ஒழிப்பு வாரம்

கொழும்பு, மே 29

போதைப்பொருள் ஒழிப்புக்கான வேலைத்திட்டங்களை மேலும் பலப்படுத்தி அச் செயற்திட்டத்தினை விரிவுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ஜூன் 22ஆம் திகதி முதல் ஜூலை 01ஆம் திகதி வரையான காலத்தை தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தி நாடளாவியரீதியில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் முறையாகவும் வினைத்திறனாகவும் முன்னெடுக்கப்பட இருக்கின்றன.




போதைப்பொருள் கட்டுப்பாடு மற்றும் குற்றங்களை குறைத்தல் பற்றிய சட்ட வரைவு தொடர்பிலான கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்னவின் தலைமையில் நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றபோதே இவ்விடயம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மதுவரி கட்டளைச் சட்டம், விபோதைப்பொருள் கட்டளை திருத்தச் சட்டம், சிறைச்சாலைகளின் பாதுகாப்பு, போதைப் பொருளுக்கு அடிமையான வர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தில் நிலவும் போதைப்பொருள் பகுப்பாய்வுடன் தொடர்பான பிரச்சினைகள் போன்ற விடயங்களைப் பற்றி இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வண. குப்பியாவத்தே போதானந்த தேரர், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் உரிய நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் பதிற்கடமை பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன உள்ளிட்ட பாதுகாப்புத்துறை பிரதானிகளும் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர். (ஐ)

# பேருவளையில் 10 பேர் கைது

கொழும்பு, மே 29

பேருவளையில் நேற்று முன்தினம் நடத்திய தேடுதல் நடவடிக்கையில் 10 பேரை கைது செய்தது பொலிஸ்.

பேருவளை, மருதானை, மஹாகொட, பெலஸ்பார்க், கோப்பியவத்த உட்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்ட தேடுதல்களில் இராணுவச் சீருடைகள் போன்ற சீருடைத் துணிகள், தேசிய அடையாள அட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, வெத்திமராஜபுர பகுதியில் பல ஏக்கர் காணியில் பாதுகாப்பு முகாம் போன்ற ஹோட்டல் ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸ் அதனை பராமரித்து வந்த இருவரிடம் வாக்கு மூலம் பெற்று அந்த ஹோட்டலை சீல் வைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கால எல்லை நீடிப்பு

கொழும்பு, மே 29

ஸ்ரீலங்கன் மற்றும் மிஹின் லங்கா விமான நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில், ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கால எல்லை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இந்தக் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்த ஆணைக்குழுவின் காலம் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# குருநாகல் வைத்தியருக்கு எதிராக 51 முறைப்பாடுகள்

## அவரின் கருத்தடை வேலைகள் 99 வீதம் உறுதி என்கிறார் அத்துரலியே ரத்ன தேரர்

கொழும்பு, மே 29

குருநாகல் வைத்தியசாலையில் சிசேரியன் சிகிச்சை என்ற போர்வையில் கருத்தடை சத்திர சிகிச்சை செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள டாக்டர் ஷாபி ஷிஹாப்தீனுக்கு எதிராக 51 பெண்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவை குருநாகல் வைத்தியசாலையில் செய்யப்பட்ட முறைப்பாடுகள். அதேபோல் மேலும் ஒரு முறைப்பாடு தம்புள்ளை வைத்தியசாலையில் பெண் ஒருவரால் செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்ய சுகாதார அமைச்சு குழுவொன்றை நியமித்துள்ளது. விசாரணை முடியும் வரை எதையும் கூறிவிட முடியாதென அமைச்சர் ராஜித கூறியுள்ளார்.

அதேசமயம் நேற்று முன்தினம் குருநாகல் வைத்தியசாலைக்குச் சென்ற அத்துரலியே ரத்ன தேரர், மேற்படி வைத்தியர் செய்த வேலைகள் 99 வீதம் உறுதியாகிவிட்டதாகக் கூறினார். இந்த விடயத்தில் யாராவது அழுத்தங்களை வழங்கக் கூடாதென்றும் அவர் எச்சரித்தார்.

முறைப்பாடுகளை முன்வைத்த பெண்கள் அனைவரும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# ஆப்கானிஸ்தானை 9 விக்கெட்டுக்களால் வென்றது இங்கிலாந்து

உலகக்கிண்ணதொடருக்கான8ஆவது பயிற்சி போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை 9 விக்கெட்களால் வீழ்த்தி இங்கிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது.

கென்னிங்டன் ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற



இங்கிலாந்து அணி முதலில் ஆப்கானிஸ்தான் அணியைத் துடுப்பெடுத்தாட பணித்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி இங்கிலாந்து அணியின் பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாமல் 38.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து160ஓட்டங்களைபெற்றுக்கொண்டது.

அவ்வணி சார்பாக மொஹமட் நபி 44 ஓட்டங்களையும் நூர் அலி ஸத்ரான் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் ஜோஃப்ரா ஆர்ச்சர் அமரரும் ஜோய் ரூட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனை அடுத்து 161 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 17.3 ஓவர்கள் நிறைவில் 1விக்கெட்டை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை கடந்து 9 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றுள்ளது. அவ்வணி சார்பாக ஜேசன் ரோய் 89 ஓட்டங்களையும் ஜோய் ரூட் 29 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டனர்.




# உலகக்கிண்ண பயிற்சிப் போட்டியில் ஆஸியிடம் வீழ்ந்தது இலங்கை அணி

உலகக் கிண்ண தொடருக்கான 7 ஆவது பயிற்சி போட்டியில் இலங்கை அணியை 5 விக்கெட்கள் வித்தியசத்தில் வீழ்த்தி ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளது.

சவுதம்டனில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன் பிரகாரம் முதலில் களமிறங்கிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 239 ஓட்டங்களை பெற்றது.

அவ்வணி சார்பாக லஹிரு திரிமன்னே 56 ஓட்டங்களையும் தஞ்சன்ஜய டி சில்வா 43 ஓட்டங்களையும் குஷால் மெண்டிஸ் 24 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக அடம் சாம்பா 2 விக்கெட்டுக்களை வீழ்த்த மிட்செல்ஸ்டார்க், பட்கம்மின்ஸ், கேன் ரிச்சர்ட்சன், க்ளென் மக்ஸ்வெல், நாதன் லியோன் மற்றும்ஸ்டீவ்ஸ்மித் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 240 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி இலக்கு என்ற ரீதியில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா அணி 44.5 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

அவ்வணி சார்பாக உஷ்மன் கவாஜா 89 ஓட்டங்களையும் க்ளென் மக்ஸ்வெல் 36 ஓட்டங்களையும் ஷோன்மார்ஷ் 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் இலங்கை சார்பாக வண்டர்சே 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# வெற்றிக்காக போராடுவோம்

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், எமது நாட்டு வெற்றிக்காக போராடுவோம் என இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஜெப்ரி வெண்டர்சே தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண தொடர் ஆரம்பமாவதற்கு இன்னமும் ஓரிரு நாள்களே உள்ள நிலையில், இத்தொடர் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாங்கள் இங்கே நல்ல பெறுபேறு ஒன்றை அடையவேவந்திருக்கின்றோம். நாங்கள் இங்கே தோல்விகளைஎடுத்துக்கொள்ள வரவில்லை. நாங்கள் இங்கே வெற்றிக்காகவே வந்திருக்கின்றோம். எமது நாட்டுக்காக நாம் போராடுவோம்.




மக்கள் அவர்கள் விரும்பும் எதனையும் பேச முடியும், ஆனால் அணியின் ஒற்றுமையே இங்கே முக்கியம். அதோடு, எமது பாசறையில் என்ன நடக்கின்றது என்பதும் முக்கியம், நாம் எந்தளவிற்கு பயிற்சி எடுக்கின்றோம் என்பதும் நாம் எந்தளவிற்கு அதனை வெளிப்படுத்துகின்றோம் என்பதும் முக்கியம்.

இயற்கையாகவே எமது அணி குறித்து எதிர்மறையான கருத்துக்கள் வெளிவரும். ஆனால், எதிர்மறையான விடயங்கள் எதிரணிகளிடமும் இருக்கும். நாம் வீழ்ந்த போதிலும், நாம் எப்படி எழுகின்றோம் மற்றும் போட்டிகளை வெல்வதற்கு நாம் எப்படி திறமை காட்டுகின்றோம் என்பதிலேயே அனைத்தும் இருக்கின்றது.

திமுத் அவரது தலைமைத்துவம் மூலம் முன்னுதாரணமாக இருக்கின்றார். அவரால் அணிக்கு ஓட்டங்களை விரைவாக பெற்றுத்தர முடியும் என்பதையும் காட்டியிருக்கின்றார். மேலும், அவர் எங்களுக்கு மைதானத்திற்கு வெளியேயும் உள்ளேயும் மிகவும் முக்கியத்துவமான நபராகவும் இருக்கின்றார்.

அணிக்கு பங்களிப்பு வழங்குவதில் நான் எப்போதும் உறுதியாக இருக்கின்றேன். சுழல் பந்துவீச்சாளர் என்பதால், குறுகிய பௌண்டரி இருக்கும் திசை ஒன்றில் நீங்கள் எப்போதும் இலக்கு வைக்கப்படுவீர்கள், நீங்கள் அழுத்தங்களை எதிர்கொண்ட போதிலும் விக்கெட்டுக்கான பந்தினை தொடர்ந்தும் வீச வேண்டும்.

நான் உலகக் கிண்ணத்தில் எனக்கான நேரத்தை பெற்றுக் கொள்வதற்கான நம்பிக்கையையும், திறமையையும் வைத்திருப்பதாக எண்ணுகின்றேன். இதற்காக நான் தொடர்ந்தும் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன் – என்றார்.

இலங்கை அணிக்காக 2017ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்திலே கடைசியாக ஒருநாள் போட்டியொன்றில் பங்கேற்ற 29 வயதான வெண்டர்சே, இதுவரை 11 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 10 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிண்ணத்தை தனதாக்கியது புங்குடுதீவு சென்.சேவியர்



புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டு கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் புங்குடுதீவு சென். சேவியர் அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பதிவு செய்யாததால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல் கணக்கில் சேவியர் அணி வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கியது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக நசரேத் அணியை சேர்ந்த அஜித் , தொடராட்ட நாயகனாக சேவியர் அணியைச் சேர்ந்த சகாயநேசன், மற்றும் சிறந்த கோல் காப்பாளராக அதே அணியைச் சேர்ந்த விதுசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# அரையிறுதிக்குள் நுழைந்தது இமையாணன் மத்தி இளைஞர்

கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிஆட்டம் ஒன்றில் இமையாணன் மத்தி அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா அணி மோதியது.

இவ் ஆட்டத்தில் 04:00 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்தி இளைஞர் அணி வெற்றி பெற்று அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது.

இமையாண் மத்தி இளைஞர் அணி சார்பாக அலெக்சன் 02, சுலக்சன், டிவிசன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர். (ஜ)



# பார்சிலோனாவை வீழ்த்தி கோபா டெல் ரே கிண்ணத்தை தனதாக்கியது வலேன்ஸியா!

ஸ்பெயினில் உள்ள கழகங்களுக்கிடையில் நடைபெறும் கோபா டெல் ரே உதைபந்து தொடரில், நடப்புச் சம்பியன் பார்சிலோனா அணியை வீழ்த்தி எட்டாவது முறையாக வலேன்ஸியா அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இந்தத் தொடரில் 30 முறை சம்பியன் பட்டம் வென்று அசைக்க முடியாத அணியாகவுள்ள பார்சிலோனா அணியின் தொடர்ச்சியான வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

1903ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பழமையான உதைபந்து தொடரான இது, ஐரோப்பா லீக் போட்டிக்கு தகுதி பெறவும் உதவுகிறது.

ஆகையால் இத்தொடர் இரசிகர்களுக்கு மட்டுமல்ல வீரர்களுக்கும் மிக முக்கியமான போட்டியாக பார்க்கப் படுகின்றது.

இவ்வாறு பல எதிர்பார்ப்புக்கு மத்தியில் இத்தொடரின் 2018 – 2019ஆம் பருவகாலத்திற்கான இறுதிப் போட்டி, கடந்த 25 ஆம் திகதி பெனிடோ விளாமெரின் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இத்தொடரில் தொடர்ந்து 5ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வெல்லும் தீவிரத்தில் பார்சிலோனா அணி, வலேன்ஸியா அணியை எதிர்கொண்டது.

இரசிகர்களின் உச்சக்கட்ட எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியின் முற்பாதியில் வலேன்ஸியா



அணி ஆதிக்கம் செலுத்தியது.

இதற்கமைய போட்டியின் 21ஆவது நிமிடத்தில் வலேன்ஸியா அணியின் வீரரான கெவீன் கெமய்ரோ அணிக்காக முதல் கோலை பதிவு செய்தார்.

இதனையடுத்து, போட்டியின் 33ஆவது நிமிடத்தில் வலேன்ஸியா அணியின் மற்றொரு வீரரான ரொறிக்கோ அணிக்காக இரண்டாவது கோலை புகுத்தி இரசிகர்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தினார்.

பதிலுக்கு பார்சிலோனா அணி எவ்வளவு முயற்சித்தும் பதில் கோலை போட முடியவில்லை. இதனால் முற்பாதியில் 2 – 0 என்ற கோல்கள் கணக்கில் வலேன்ஸியா அணி முன்னிலைப் பெற்றது. தொடர்ந்து, நடைபெற்ற இரண்டாவது பாதியில். வலேன்ஸியா அணிக்கு பதிலடி கொடுக்க வேண்டுமென்ற முனைப்பில் பார்சிலோனா அணி விளையாடியது.

இதற்கமைய போட்டியின் 73ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரரான லயனல் மெஸ்ஸி, அணிக்காக முதல் கோலை பெற்றுக்கொடுத்தார். இதன்பிறகு சுதாகரித்துக் கொண்ட வலேன்ஸியா அணி, தடுப்பாட்டத்தில் ஈடுபட்டு நேரத்தை நகர்த்தியது. இதனால் போட்டியின் இறுதியில் வலேன்ஸியா அணி, 2 – 1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று மகுடத்தை சூடியது.

### கண்டியிலும்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பணிபுரிந்து இப்போது மட்டக்களப்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற சிராஜ் என்ற வைத்தியரும் இன்னுமொரு பெண் வைத்தியரும் சுமார் 6 ஆயிரம் பெண்களை மலடாக்கியுள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

இப்படி பேராதனைப் பகுதியில் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமெனவும், பாதிக்கப்பட்ட பெண்கள் முறைப்பாட்டைச் செய்ய முன்வரவேண்டுமெனவும் எஸ்.பி. கோரிக்கை விடுத்தார். (ஐ)

### குருநாகல் வைத்தியசாலை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நகரிலுள்ள வர்த்தக நிலையங்களும் முற்றாக மூடப்பட்டிருந்தன.

வைத்தியர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் வைத்தியர் சரத் வீரபண்டாரவை இடமாற்றம் செய்வதற்குச் சுகாதார அமைச்சர் முயற்சிக்கிறார் என தெரிவித்தும், வைத்தியர் ஷாபிக்கு எதிராக முறையான விசாரணை நடத்தவேண்டும் என வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வைத்தியருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் விசாரணைகளை அரசியல் தலையீடு இன்றி முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் வைத்தியசாலைக்குச் சென்ற அத்துரலிய ரதன தேரர், வைத்தியருக்கு எதிராக முறையிட வந்திருந்த பெண்களுடன் பேச்சு நடத்தியிருந்தார். (ஐ)

### முல்லைத்தீவு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்ச்சைக்குரிய ஆலயம் தொடர்பான வழக்கு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரால் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த விசாரணைகளின்போது நீதிமன்று இம்மாதம் 6ஆம் திகதி வழங்கிய தீர்ப்புக்கு அமைவாக கணதேவி தேவாலயம் என எழுதப்பட்டுள்ள பெயரை நீக்கி நீராவியடி பிள்ளையார் ஆலயம் என எழுதி மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு மன்று கட்டளையிட்டிருந்தது.

இந்தக் கட்டளை வழங்கப்பட்டு 20 நாள்களை கடந்துள்ள போதிலும் பொலிஸார் அதனை நடைமுறைப்படுத்தவில்லை எனவும், பௌத்த பிக்குவால் பிள்ளையார் ஆலயத்துக்கு மட்டும் புதிதாக இரண்டு சி.சி.ரி.வி. கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளமை தொடர்பிலும் மன்றின் கவனத்துக்குப் பிள்ளையார் ஆலய நிர்வாகம் சார்பாக மன்றில் வாதாடிய சட்டத்தரணிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத் தலைமை பொலிஸ் அதிகாரியை மன்றுக்கு அழைத்த மாவட்ட நீதிபதி, குறித்த சம்பவங்கள் குறித்து வினவியமையுடன் உடனடியாக பெயரை மாற்றி எழுதுமாறும் பௌத்த பிக்குவால் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. கமெராக்களை உடனடியாக அகற்றுமாறும் கட்டளையிட்டார்.

இதனையடுத்து நேற்று முன் தினம் மாலை பெயர் 'நீராவியடி பிள்ளையார் ஆலயம் என மாற்றி எழுதப்பட்டது. ஆனால் சி.சி.ரி.வி. காமெராக்களை நேற்று முன் தினம் பௌத்த பிக்கு அகற்றச் சம்மதிக்காத நிலையில் நேற்று அவை பொலிஸாரால் அகற்றப்பட்டுள்ளன . (ஐ)

### முஸ்லிம்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சித்து வருகிறார் எனவும் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இது சம்பந்தமாகக் கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி உடனடியாக இடமாற்றங்களை இரத்துச் செய்து உத்தரவிட்டார்.

இந்நிலைமையில், 30 முஸ்லிம் பாடசாலைகளை இணைத்து காத்தான்குடியில் தனியான முஸ்லிம் கல்வி வலயம் ஒன்றை ஏற்படுத்த ஆளுநர் ஹிஸ்புல்லா மேற்கொண்ட முயற்சியும் தோல்வியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கண்டியில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ட்ரோன் எனப்படும் ஆளில்லா விமானங்கள் பறந்து திரிகின்றன.

தினமும் இரவில் வெவ்வேறு நேரங்களில் இந்த ஆளில்லா விமானம் சுற்றி திரிவதைப் பலர் அவதானித்துள்ளனர்.

இரவு 7 முதல் 11 மணி வரையிலான காலப் பகுதியிலேயே இதனை அதிகமாக அவதானிக்க முடிவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

முதுனகடையில் அமைந்துள்ள கடற்படை முகாமுக்கு மேல் இந்த ட்ரோன் விமானம் சஞ்சரிப்பதாகவும் மீண்டும் மாரசன்ன, தெல்தோட்டைப் பிரதேசத்தை நோக்கி அது பயணிப்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பாதுகாப்பு பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் இதுவரை இந்த மர்மம் துலங்கவில்லை எனக்கூறப்பட்டது.

அண்மையில் இந்தப் பகுதியில் பறந்த ட்ரோன் மீது கடற்படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட போதிலும் அது கடற்பகுதிக்குள் சென்று மறைந்து விட்டது எனக் கூறப்பட்டது.

கடந்த 21ஆம் திகதி இலங்கையில் நடத்தப்பட்ட தொடர்தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களை அடுத்து இலங்கையில் ட்ரோன் கமராக்களை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் தரப்பின் தேடுதலின் போது ஐ.எஸ். பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்ட ஆயுத தளபாடங்களில் ட்ரோன் கமராக்கள் இருந்தமை குறிப்பிடத்தக்கது

### யாழ்ப்பாணத்தில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சென்று அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தொடர்தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 250 இற்கு மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டமையுடன், 500 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் படுகாயமடைந்து பாதிக்கப்பட்டனர். இந்தத் தாக்குதல்களுக்கு சிரியாவைத் தளமாகக் கொண்ட சர்வதேச பயங்கரவாத இயக்கமான ஐ.எஸ்.ஐ.எஸ். உரிமை கோரியிருந்தது.

இதனையடுத்து புத்தளம் உள்ளிட்ட நாட்டில் சில இடங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர். இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மாகாண...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதியுடன் தெரிவு செய்யப்பட்ட மேல் மாகாண சபையின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ள போதிலும் தேர்தல் நடத்தப்படாமையால் அந்த மாகாணத்தில் வாழும் மக்களின் வாக்களிக்கும் உரிமை மீறப்பட்டுள்ளதாக மனுதாரர் கூறியுள்ளார்.

### ரிஷாத்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சர் ரிஷாத் பதியூதீன், மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஆகியோரைப் பதவிகளில் இருந்து நீக்குமாறு சாசன பாதுகாப்புச் சபையின் செயலாளர்களான பௌத்த பிக்குமார் கையெழுத்திட்ட ஆவணத்தைக் கடந்த 22 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளித்தோம்.

இது சம்பந்தமாக ஜனாதிபதி சாதகமான பதிலை வழங்காது போனால், எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மத தலைவர்கள், புத்திஜீவிகள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், படையினருடன் கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் பகிரங்க கலந்துரையாடலில், கலந்துக்கொள்ளுமாறு, இளைஞர், யுவதிகள், ஓய்வு பெற்ற இராணுவத்தினர், பயங்கரவாதத்திற்கு எதிரான சகலருக்கும் அழைப்பு விடுக்கிறோம்- என்றார். (ஐ)

### ஆலய...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு சிமிழ் கண்ணகை அம்மன் ஆலயத்தின் உபயகாரர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நேற்றுக் காலை அவர்கள் ஆரம்பித்தனர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவிக்கையில்-

முப்பது வருடங்களின் பின்னர் இந்த ஆலயத்தில் கடந்த வருடம் நடைபெற்ற தேர்த் திருவிழாவின் போது, பக்தர்கள் எவரும் வடம் தொட அனுமதிக்கப்படவில்லை. ஜே.சி.பி. இயந்திரம் கொண்டு தேர் இழுக்கப்பட்டமை அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

இந்நிலையில் இவ்வருடத் திருவிழாவையும் ஆலய நிர்வாகத்தினர் நிறுத்தி வைத்துள்ளமை அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே இந்தச் செயற்பாட்டைக் கண்டித்து சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்- என்றனர்.

இதற்கு முன்னரும் கடந்த வாரம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆலய உபயகாரர்களும், அடியவர்களும் போராட்டமொன்றை நடத்தினர். ஆனால் அவ்விடயத்துக்குத் தீர்வு வழங்கப்படாதமையால் அவர்கள் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்த போராட்டத்தில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு, உபயகாரர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

# வில்பத்து காடழிப்பு; மீண்டும் விசாரணை



கொழும்பு, மே 29

வில்பத்து காட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்களை அகற்றுமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கான திகதியை மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதற்கமைய இந்த வழக்கை எதிர்வரும் ஜூலை மாதம் 31ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழல் நீதி மையத்தால் 2015ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு முன்னதாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மஹிந்த சமயவர்தன முன்னிலையில் விசாரிக்கப்பட்டு ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படவிருந்தது.

எனினும் அந்த மனு மீதான வழக்கை மீண்டும் விசாரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த மனு எதிர்வரும் ஜூலை 31 ஆம் திகதி ஜனக் டி சில்வா மற்றும் நிஸங்க பந்துல கருணாரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. (ஐ)

# சந்தேகத்திற்கிடமாக நடமாடிய நான்கு பேர் மடக்கிப் பிடிப்பு!

மட்டக்களப்பு, மே 29

மட்டக்களப்பு வெல்லாவெளியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய 4 முஸ்லிம்களை இளைஞர்கள் பிடித்து இராணுவத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வெல்லாவெளி புன்னக்குளம் பகுதியில் நேற்றுக் காலையில் நான்கு முஸ்லிம்கள் நடமாடியமையை அவதானித்த இளைஞர்கள், அவர்களிடம் விசாரித்ததில், அவர்கள் முன்னுக்குப் பின் முரணாகப் பதிலளித்துள்ளனர்.

இதனால் சந்தேகமடைந்த இளைஞர்கள், அவர்களைப் பிடித்து இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர். இராணுவத்தினர் அவர்களை மேலதிக விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். (ஐ)

# பண்டாரகம அல்-கஸ்ஸாலி பாடசாலை அதிபர் கைது !



கொழும்பு, மே 29

பண்டாரகம , அட்டுலுகம, ஜெயக்கொடிகந்த , மாராவ பகுதிகளில் நேற்று நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில், அல்-கஸ்ஸாலி முஸ்லிம் கனிஷ்ட பாடசாலையின் வளவில் இருந்து வாள்கள், காவி ஆடைகள் மற்றும் மஞ்சள் ஆடைகள் கண்டுபிடிக்கப்பட்டமையையடுத்து பாடசாலை அதிபர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.

பாடசாலை வளவில் இருந்து 7 காவி உடைகள் ,3 வாள்கள் , 3 பயணப்பைகள் மீட்கப்பட்டுள்ளன.

அதேபோல மரக்காலை ஒன்றில் இருந்து 34 காவி உடைகள் மற்றும் பல பொருள்களும் மீட்கப்பட்டன.

பாணந்துறை பொலிஸ் பிரிவின் பொலிஸார் மற்றும் முப்படையினர் இந்தத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.(ஐ)

### குருநாகல் வைத்தி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முறைப்பாடு செய்தனர்.

நேற்றுக் காலையில் குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு வந்த சுமார் 20 பேர் கொண்ட பெண்கள், தமக்குக் கருத்தடை சத்திர சிகிச்சை செய்யப்பட்டதாக முறைப்பாடு செய்தனர்.

குருநாகல் போதனா வைத்தியசாலையில் நேற்று முன் தினம் வரை 51 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

நேற்று தம்புள்ளை வைத்தியசாலை, பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் 10 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

இதுவரை 80 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் வைத்தியருக்கு எதிராகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹிஸ்புல்லாவுக்கு மேலும் ஒரு பதவி

கொழும்பு, மே 29

கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவுக்கு திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்கள் மூன்றுக்குமான இணைப்புக் குழுத் தலைவர் பதவி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து கண்டறிந்து அவற்றை விரைவுபடுத்துவதற்கே இந்த பதவி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய பதவி வழங்கப்பட்டதன் பின்னர் முதற்கட்ட நடவடிக்கையாக திருகோணமலை மாவட்ட இணைப்புக் குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி திருகோணமலை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

திருகோணமலை மாவட்டத்துக்கான இணைப்புக் குழுவின் தலைவர்களாக, துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை பிரதி அமைச்சர் எம்.எஸ்.மஹ்ரூப் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சம்பந்தன் ஆகியோர் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குருநாகல் வைத்தியரின் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள்

## கண்டிக்கிறார் அஸாத் சாலி



கொழும்பு, மே 29

குருநாகலில் கைது செய்யப்பட்ட வைத்தியர் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்று மேல் மாகாண ஆளுநர் அஸாத் சாலி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த வைத்தியரிடம் சிசேரியன் சத்திர சிகிச்சைக்காகச் சென்ற பெண்களுக்கு கருத்தடைச் சிகிச்சை செய்தார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது அடிப்படையற்றது. ஒரு வைத்தியர் சத்திர சிகிச்சை மேற்கொள்ளும்போது அவருடன் மேலும் நான்கு பேர் உதவியாளராகச் செயற்படுவர். அவர்கள் இது தொடர்பில் இதுவரை எந்த விவரங்களையும் வெளியிடவில்லை. அந்த வைத்தியர் அவ்வாறான குற்றச்செயலைச் செய்திருந்தால் உதவியாளர்கள் அதனை வெளிப்படுத்தியிருப்பார்களே.

குருநாகல் வைத்தியசாலையின் வைத்தியர், அங்குள்ள ஜே.வி.பி. உறுப்பினர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் இது தொடர்பில் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அந்த வைத்தியசாலையின் வைத்தியர் செய்தியாளர் மாநாடு பொன்றைக் கூட்டி இதனை வெளிப்படுத்தியுள்ளார். உண்மையில் முதலில் அவரைக் கைது செய்ய வேண்டும்.

குற்றம் சாட்டப்பட்டுள்ள வைத்தியர் பல வர்த்தக நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவராவார். வருடமொன்றுக்கு 3 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட நிதிப் புரள்வு அவருடைய வர்த்தகத் தொடர்புகளிலுள்ளது. அவரது குடும்பப் பின்னணியினரும் வர்த்தகர்களே. இந்த நிலையில், அவரிடம் உள்ள நிதியைக் கொண்டு அவர் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்புள்ளவர் என எப்படிக் கூறமுடியும்?. இது சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டாகும் – என்றார். (ஐ)

# பயண எச்சரிக்கை தளர்த்தியது சுவிஸ்!

## மைத்திரி – ரணில் கோரிக்கையை அடுத்து

கொழும்பு, மே 29

*ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணிலின் கோரிக்கையை அடுத்து இலங்கை தொடர்பாக விடுக்கப்பட்டிருந்த பயண எச்சரிக்கையை சுவிற்சர்லாந்து அரசு தளர்த்தியுள்ளது.*

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை அடுத்து இலங்கை தொடர்பாக சுற்றுலாப் பயணிகளுக்கு விடுக்கப்பட்டிருந்த பயண எச்சரிக்கையை சுவிற்சர்லாந்து அரசு தளர்த்தியுள்ளதாக நேற்று அந்நாட்டு வெளிவிவகாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் ஈஸ்டர் ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 253 பேர் கொல்லப்பட்டதுடன் 500ற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருந்தனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பல்வேறு நாடுகள் இலங்கைக்கு செல்வது குறித்து தமது நாட்டுப் மக்களுக்குப் பயண எச்சரிக்கை விடுத்திருந்தன.

இந்நிலையில் தற்போது இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள சுவிஸ், இலங்கையில் இருக்கும்போது பயணிகள் தங்களது தனிப்பட்ட பாதுகாப்பு குறித்து விழிப்புடன் இருக்கவேண்டுமெனவும் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் வெளிநாட்டுத் தூதுவர்களுடனான சந்திப்பின்போது இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சாவகச்சேரி சந்தை வியாபாரிகள் இன்று கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 29

சாவகச்சேரிப் பொதுச்சந்தையை குத்தகைக்கு விடும் திட்டத்தை எதிர்த்து சந்தை வியாபாரிகள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

சாவகச்சேரிச் சந்தையைத் தனியாருக்குக் குத்தகைக்கு விடச் சாவகச்சேரி நகர சபை தீர்மானித்து, அதற்கான கேள்வி கோரலையும் விடுத்துள்ளது. இந்த நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து சந்தை வியாபாரிகள் இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இவ்வாறு சந்தை குத்தகைக்கு விடப்படுமானால், வியாபாரிகள் மாத்திரமின்றி நுகர்வோரும் பாதிக்கப்படுவார்கள். எனவே தனியாருக்குக் குத்தகைக்கு விடும் திட்டத்தை நகர சபை கைவிட வேண்டுமெனப் போராட்டத்தில் ஈடுபடவுள்ள வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோரின் வாகனங்களை பாதுகாக்கும் விதமாக வாகனப் பாதுகாப்பு தரிப்பிடம் அமைக்கப்பட வேண்டும். உழவர் சந்தையை மாற்றியமைக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டத்தில் ஈடுபடவுள்ளார்கள் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு நகர்ப் பகுதி வர்த்தகர்களின் ஆதரவையும் சந்தை வியாபாரிகள் கோரியுள்ளனர். (ஐ)

# 3 மீனவர்களை காணவில்லை

அம்பாறை, மே 29

அம்பாறை, சாய்ந்தமருது நடுத்துறை கடற்கரையிலிருந்து ஆழ்கடல் மீன்பிடிக்காகப் படகு ஒன்றில் சென்ற மூன்று மீனவர்கள், மூன்று நாள்களாகியும் இதுவரை கரை திரும்பவில்லை என மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இவர்களைத் தேடும்பணி தொடர்கிறது.

மீனவர்கள் மூவரும் கடந்த 26ஆம் திகதி அதிகாலை கடலுக்குச் சென்றனர் எனவும், மறுநாள் காலை திரும்பவேண்டிய அவர்கள் இது வரை கரைசேரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# ஞானசாரருக்கு மன்னிப்பு; திஸ்ஸ விதாரண எதிர்ப்பு!



கொழும்பு, மே 29

பொது பலசேனா பொதுச்செயலாளர் ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளமை ஒருதலைப் பட்சமானது என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த காலங்களில் ஞானசார தேரர் கடுமையான முறையில் பிற இனங்கள் மீது இனவாதக் கருத்துக்களைப் பகிரங்கமாகக் கட்டவிழ்த்து விட்டார். இதன் காரணமாக பல விளைவுகள் ஏற்பட்டன. இவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நீதிமன்றத்தை அவமதித்த வழக்கில் சிறைவாசம் அனுபவித்த ஞானசார தேரரை எவரும் எதிர்பாராத விதத்தில் பொதுமன்னிப்பு வழங்கியமை வருந்தத்தக்கது.

ஜனாதிபதிக்கு அரசமைப்பின் பிரகாரம் பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம் காணப்படலாம். ஆனால் அதனை முறையாக செயற்படுத்தியிருக்கவேண்டும். இவரது விடுதலையைத் தொடர்ந்து மறுபுறம் பாதிக்கப்பட்டவர்கள் நீதித்துறையை நாடும் போது பிரச்சினைகளே ஏற்படும் – என்றார். (ஐ)

# கொழும்பில் பல இடங்களை தாக்கத் திட்டமிட்டது ஐ.எஸ்.!

கொழும்பு, மே 29

கொழும்பின் பல பகுதிகளில் தாக்குதல் நடத்த ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு திட்டமிட்டிருந்ததாகக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இராணுவத்தினர் கொழும்பின் பல பகுதிகளில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளில் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் பல இடங்கள் தொடர்பான 88 வரைபடங்கள், 106 இராணுவ உடைகள், இரண்டு சவூதி அரேபிய அடையாள அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் தாக்குதல் திட்டம் தொடர்பாகத் தகவல் கிடைத்த முதல் சந்தர்ப்பம் இதுவென தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# அமித் வீரசிங்கவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மே 29

தெல்தெனிய பகுதியில் கைது செய்யப்பட்ட மகசோன் பலகாய இயக்கத்தின் தலைவர் அமித் வீரசிங்கவிற்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தெல்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற கலகச் சம்பவங்கள் தொடர்பாக மகசோன் பலகாய தலைவர் அமித் வீரசிங்க கடந்த 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதிவான் கடந்த 15 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார்.

அவர் நேற்று மீண்டும் நீதிமன்றில் முல்லைப்படுத்தப்பட்டபோதே அவரை இன்று வரை விளக்கமறியலில் வைக்கக் கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த வருடம், மார்ச் மாதமளவில் திகன, தெல்தெனிய முஸ்லிம் பிரதேசங்களில் கலவரத்தை ஏற்படுத்தி, வீடுகள் மற்றும் கடைகள் உள்ளிட்ட சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தமை மற்றும் தீக்கிரையாக்கிய சம்பவங்கள் தொடர்பில் அமித் வீரசிங்க கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மஹாநாயக்கர்களை சந்தித்தார் தொண்டா



கொழும்பு, மே 29

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழு நேற்றுக் கண்டிக்கு விஜயம் மேற்கொண்டு பௌத்த மத பீடங்களின் மஹாநாயக்கர்களைச் சந்தித்துள்ளது.



இதன்போது அஸ்கிரிய பீடத்தின் மஹாநாயகர் வரக்காகொட ஞானரத்தன தேரரை இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் சந்தித்ததுடன் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, மல்வத்து விகாரைக்கு விஜயம் செய்த இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழுவினர் மல்வத்து பீடத்தின் மஹாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரைச் சந்தித்ததுடன் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதன்போது, முன்னாள் மத்திய மாகாண அமைச்சர் எம்.ரமேஷ்வரன், ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான், முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினர் கணபதி கனகராஜ், கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் எனக் கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் உடனிருந்தனர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 29.05.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.